மார்கழி
16
2007
ஐப்பசி

ஆசிரியர் மனோன்மணி

புது எழுத்து

இணைப்பு இதழ்

அட்டை
இந்த்ர பிரமீத் ரோய்

புகைப்படங்கள்
ஆர். ஆர். சீனிவாசன்
பா. வெங்கடேசன்
விஸ்வாமித்திரன்

கோட்டோவியங்கள்
பேய்க்காமன்



புது எழுத்து



உலோகமொழியுடல்
ரஸவாதி நகுலன்

கோணங்கி

நகுலமுனிகொள் - அ

சுசீலாவின் உலோக விந்தை - ஆ

சுசீலா ஆங்காங்கே கிறுக்கிவைத்த 2007 மே 17 - இ

சேதன அசேதன சம்வாதம் - ஈ

ஆண்டலைப்புள் நகுலனுக்குச் சொன்னது - உ

நகுலராமாயணம் - ஊ

தூயுருறும் மணல் கேலக்ஸி - எ

நகுலனின் உலோகக் குதிரைக்கண்ணாடி - ஏ

உவாந்தம் - ஐ

நகுலமுனி கொள் – அ

சொல் – இட நாற்காலி உருவழிய சூரல்
படர் கொடியாய் இயற்கை எய்தியது

அன்றைய உட்கூட்டில் மூன்று ஐந்து 8ல் பூட்டப்பட்ட
நாய்கள் 8ன் இரண்டு வளையங்களுக்குள் மூன்று ஐந்து
தாவியபடி தாம் இறந்தும் விரல்களில் பிறந்தது
நகுலராமாயணம்.

எலும்புகளுக்கும் தொலைவுகளுக்கும் ஒளி ஊடுருவும் இடைச்சுவரில் எழுதுவதான நகுலன் உருவற்ற கபாலத்தின் ஆழ்சுனையில் நீரோட்ட ஒளியூட்டும் பச்சையை பூமியைச் சுற்றி வரையும் இயற்கையாக அதில் கலந்திருக்கப் பார்த்தேன்.

நகுலநதி அதன் படிக கோடுகள் உள்ள அற்புத வடிவமைப்பை நான் நேசமிகக் கண்டேன்.

ஆழங்களிலிருந்து ஒளியுமிழ் முத்துக்கள் எழுந்து தமிழாய் வருவதையும் கண்ணாடியில் நீந்தும் நீர்க்குமிழ்களையும் அவற்றில் அடங்கிய ஆகாய நீலத்தையும் நான் உற்றேன்.

கண்ணாடி உலோகத்தின் ஏழுசுற்று சுடர் நெய்த இடைத்திரைகள் காண பேருருநீலப் பெருந்திரை கரைவின் மாமாயைக் கருந்திரை பரவெளிபாசை நிறம் போனால் சித்துறுவெளி சிவந்து வெளிர்ந்த அலை பொருளுருவெளியை பொன்மைத் திரை அண்மையில் மெய்ப்பொருள் இதுவென அதுவென மாயமும் யதார்த்தமும் கனவுகளை அலசிய வெண்மை பால் பளிங்குருவான அகண்டத்தின் ஒளிஆடி உருவங்கள் எல்லாம் மெலிந்து மறைந்திருக்கும் தாள் உலோகச் சுருள் தான் கவிதை.

அற்றார் அழிபசி தீர்க்கும் பேரறம் தொடங்கிய 'வருவீர் எல்லோரும் வடதிசைக்கே' வென்றகவிஞன் விழன் மேய்ந்த மண்கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகாரதர்மவிருத்தியுந் துவங்கும்படி நிச்சயித்திருந்த இடத்துக்கு நிச்சயமின்மையை வரித்த நகுலன் போய் அங்கு விழன் குச்சியை உருவி நேர்க்கோடும் கிடைக்கோடும் ஒடித்து வடித்த கோட் ஸ்டாண்ட் கவிதையில் குச்சி கோட் ஆனது. 'உடலை உரித்து கருப்பு துணியைப் போட்டால் ஒளி அடித்தது மிஸ்ட்டிக் கவிஞனுக்கு'.

ஆயிரம் கண்களால் நகுலநதி காண்கிறது, அவனை பச்சை, வெள்ளை படிக ஆகாய நீலக் கண்களால் நதியில் தொடர்ச்சியாக நீர் பாய்ந்திருந்ததையும் இன்னமும் அவ்விதம் பாய்ந்திருப்பதையும் கண்டேன். சூட்சும இருண்மையும் மர்மமும் கொண்டு வழக்கு மீறி வசப்படாது எழுதிய ஹெராக்ளிடஸால் ஒரேநதியில் இரண்டு முறை ஏறமுடியாது. மரணத்தின் குறியீடாக உருவகப்படும் எலும்பின் நிறம் சாம்பல் நிறமல்ல இளஞ்சிவப்பு நிறம். மேகலையை ஆபுத்திரன் தன் முற்பிறப்பு எலும்பைக் கண்டதும்

செவ்விய நிறம். இவ்விதம் மரணம் வாழ்வின் மூலத்தோற்றமென ஹெராக்ளிடஸ் பிரிவாற்றாமையால் தன் நூலை வளத்தின் நிலாச்சரீர தேவதை உறையும் ஆர்டெமிஸ் கோயில் கீழே புதைத்து மறைந்தான். தொல் வடிவக் கவிதைதான் மொழி இவ்வேளை ஹெராக்ளிடஸ் நூலை நகுலன். வாசகர்கள் கீழே பிளந்தெடுக்கக் கற்படிவமாக சரித்திரச் சின்னமாகும். பெயரும் அரிமானப்பட நிச்சயமற்றதில் மிதக்கிறான் வாசகன் நகுலனோடு. நூல் தொடக் கபாலமுள்ள பெறும் பாதங்களில் ஒட்டி கல்துகளில் உதிரும் கிரிப்டோநூலகம் அந்த முழு நூலையும் நகுல வாசகமான 'நம் பாதையின் இடைவெளியில்' திறந்தது. அந்த நதி அதுவாக இருந்து வருகிறது. அதே பொழுது ஒவ்வொரு கணமும் புதிதாகவும் இருந்து வருகிறது. யார் இதை அறிந்துணர்வார்கள் அதன் மீது கசங்கி எரிந்த காகிதங்களிலிருந்து மை இருட்டு கரைந்த நீர்முன் நிழல் கோடுகள் கறங்கி நீல உருவழிந்த சுசீலா. 'அழகு சுமந்து இளைத்த ஆகத்தாள்'. அவள் தான் தம்மைப் பெற்ற நகுலன்.

சொல் – இட நாற்காலி – உருவழிய
சூரல் படர்கொடியாய்
எய்தியது
இயற்கை

கையெழுத்துச் சுருளின் சிதிலத்திலிருந்து நகுலனின் முழுஉடலும் உலோகத் தனிமங்களாகி பரிதியில் மோதிய றெக்கைகள் தோன்றத் தோன்ற உதிரும் இறகுகளின் வானவில் நிறப்பீலிகளை சேகரித்து வருகிறேன் வானவில் பழங்களாக.

கோட்கவிதைகளின் உலோகஸ்டாண்ட் எதிர்கால போதைதர நகுலனின் பிஜாய்ஸ் லேபிள் பிராந்தி றெட் குப்பிகளின் அடியில் மிகையாகக் குடித்தவனாக கோட்டுக்குள் வரிந்தபடி பதுங்கியிருக்கிறேன்/றோம். கோட்டில் சூஃபிகள் மந்திரித்த மரைக்காயர் கப்பலில் வந்த பச்சைக் கற்களில் செதுக்கிய பித்தான்கள் பச்சை குத்திய ஆயிரம் சொற்படிவுகள் புஷ்பராக ஒளியின் நீரோட்டம் சுற்றிப்பரவும் மூலகநெடி சிதல் சிதலாக உதிரும் வெள்ளி இறகுகளில் நிலாக் கோளத் தூசு விரல்களில் படிகிறது. கனிச்சாறு பூசும் வௌவால்களின் இருட்டு பித்தான்கள் முளைத்து எரிகற்கள் எனப்படும். தன்னிடத்திலேயே மொழி உளங்கொண்ட நகுலன் வால்வெள்ளியாய் நீண்டு மறைகிறார்.

ஒரு பண்டைய கால கதையில் நிலவு ஒரு நீல நிற வான் சமுத்திரத்தில் மிதக்கும் மந்திரவெள்ளித்தீவாகும் என்பதையும் நம்பிய நகுலனுக்கு அத்தீவில் கிடைக்கும் சங்கு சிப்பியில் பிறக்கும் முழு முத்து நிலவு போன்ற வடிவம் கவிதை அதன் ஒளிர்வு வெண்மை.

எளிதில் கண்ணுக்குப் புலப்படாத சாயைகளுடன் பழங்காலத்திலிருந்து நாகரீகங்களில் புழங்கிவந்த சுத்தவெள்ளி மதுக்கோப்பைகள் வெகுவாய் போதமேற்றிவிடும். இதற்கு மதுரைப்பொது, வெண்பொன் என இயல்புகொள்ள நகுலனின் உண்கலத்தில் தேய்ந்த கோடுகளில் விரல்கள் பூசிய அமுதை உருட்ட சித்தம் சொருகிக் கண்களில் மெல்லிய பூக்கள் தீரத் துலக்கமானது நவீன உலகம். கவியுடன் வெள்ளிக்குவளைகளில் மது குடித்தவர் விரைவில் மயங்கி பழங்கால அலையில் புலன் விழிப்புற்றவர்கள் எனவே.

கண்பீலி மயிர்முனை துக்கத்தில் குமிழிகளாய் உதிரும் மௌத்திகம் உனது கண்ணீர். முகம் கழுகரசன் ஜடாயுவென நீள்கிறது மிஸ்ட்டிக் கவிஞனுக்கு. வெளிவிடாமல் விழுங்கிய கண்ணீர் விழிகளில் பொங்கி கீழே விழுந்தாலும் அந்தரத்தில் மிதக்கும் 'கடல் பற்றிய 17 கவிதைகளும்' கடல்பளிங்குப் பாவைகளின் கண்ணீரும் வைரத்திரள்.

கருகாத சுடர் பரவும் படிக பிரமிள் தன்னையே செதுக்கிச் செதுக்கி கடந்த ஊழிப்பயணம் 'வடக்கு வாசல்' பரவி சருகுறுகின்றன பிரமிள் விட்டுச் சென்ற 'மண்டபம்' உலர்ந்து மடிக்கப்பட்டு காய்ந்து மஞ்சள் பழுத்த இலை ரேகையில் மரகதப் பசுமை மலைகளாய் விடிகிறது. நீலத்தின் சாயைகளை எட்டித் தொடும் நீலமாய் எழுந்த சிறுகதையிலுள்ள மலைத்தொடர் வாழ்வின் கதி நின்றுறைந்து வெகுவிரைவில் வறட்சியின் பாலை மரம் தளிர்த்த இலைக்கூட்டம் பட்சிகளாய் அமரும். இலைகளை உதிர்த்துக் கொண்டிருக்கிறது வடக்கு வாசல்.

நகுலனைத் தேடிச் சென்ற அரிஸ்டோ ஜங்சனிலுள்ள பிராந்திக் கடை வெயில் காயும் வேனிற் பருவத்திலே மேகமறைப்பிலிருந்து வெளிவந்த அனந்தபுரி தகிக்கும் சூரியனோடு ஆடிக்குதிக்கிறது. மாமர விடுதியில் கிளைகளெனப் பொங்கிய நிழலின்

சாயல்களாய் இலைச்சருகுகள் மடித்த ஈரம் உடலில் பரவுகிறது போதையாய் வந்த கருப்பு நாயின் நிழல்முகம் நீண்டு மெலிதான திருகுசுருளாய் வலைகளைப் பின்னும் நாய் மோப்ப மொழி தொண்ணூற்று ஆறு வகை ஞான இழைகளில் எடுத்த சித்தம். பக்கத்தில் வந்த மஞ்சள் கருப்பு நிற ஆட்டோவில் மிஸ்ட்டிக் கவிஞன் கைகளை விரித்திருந்து விழிகளை அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தவாறு 'வண்டு பூவுடன் கட்டிப் புரளும் விந்தைக் காட்சி, கத்தி முனை மீது நடை பதறாமல் கடக்கும் விந்தை. வேண்டாமை என்ற விழுச்செல்வம். தன்னுள் மறையும் அமரரின் அடக்கம், ஓய்ந்த போதும் ஒடுங்காமல் சலிப்பது, ஒவ்வொரு புத்தகமும் ஊர், ஒவ்வொரு பாத்திரமும் மனிதன், மனதில் மறைந்து போன ரகஸியங்கள், திகம்பர வீதிகளில் ஒரு சுதந்திர சஞ்சாரம், புலிவாலை இழுத்து வேடிக்கை பார்க்கத் தூண்டும் ஒரு உத்வேகம், சிங்கத்தின் தாடியைக் குலுக்கும் ஒரு சாகசம்..... போங்கள்' (நவீனன் டைரி) என தொண்ணூற்று ஆறு அரூப இழைகளின் மோப்பத்தில் வரைந்த பித்தாதீத ஓவிய ஏடு தான் நாய்கள். நாயின் வலைக் கால்கள் பின்னிக் கொண்ட ஞானப் பெண்ணே... சுசீலா... சுற்றித் தடம் போய் வட்டம் சுருங்கிய பச்சைநிறம் டெஃஹாஸின் ஓவியக் கணிதமாய் உருமாறி சுசீலாவும் மறைந்த நாயுடன் கரைகிறார் இவ்வேளை. வெவ்வேறு உருநிழல்கள் இரண்டாம் ஒளித் திரியில் ப்ரசன்னமாகும் பிரமிள், திருமூலர், தேவதேவன், தி.சோ.வி., சி. மணி, பிரம்மராஜன், ஜாய்ஸ், டிலான் தாமஸ், ஏட்ஸ், கேசவமாதவன், எஸ். நாயர் மற்றும் கொப்பூழிற்குள் மூழ்கி மறைவதைக் காண்கிறேன். நாய்களின் மோப்ப குணங்களில் ரகஸிய இழைகள் வேறு உலகங்களோடு இணைக்கப்படுவதில் சாயைகளை வகையில் வகை பிரித்து சொல்வதானால் பிரம்மராஜனின்

> 'கேதார் கணவாயில் பிரதியின் பிரதியிலிருந்து
> பிரதியான புத்தரின் சிலையை.....'

தசசீலங்கள் மனதில் கிளைக்கும் நாயாகப் பிறந்தார் போதிசத்துவர். உயிர்த்தத்துவம் விளங்க ஜைனக் கதையில் நாய் காதில் மந்திரித்த திகம்பரர் விடுதலையளித்ததும் இருக்க நாயை எடுத்து அதன் மூக்கால் கிறுக்கிச் சென்ற நாவல். நாய்களோடு பேசும் பத்திரகிரியார் ஓடிவந்த நாயைப் பெண்ணாக்கி உருமாற்றம் தன் தோல் போர்த்த அன்று இரவில் பித்தமாய் சிரிசிரியென நரிகள் நுழைந்து பஞ்சமாய் இருட்டிவந்த மண் தெரு காலியாகிவிட்டதில் பொட்டி வியாபாரி 'மிருகம்' சிறுகதை திறந்து ஆளில்லா வீட்டு பாழ் கதவிடுக்கில் நாய் முகத்தை நுழைக்கும் பயத்தில் நசுங்கப் பதறிய குருதி இழைகளிலோடும் நாயின் ரகஸியத்தைப் பற்றிய ரகஸியத்தின் நாவல்களின் நாவல். தமிழ் நாவல் இலக்கியத்தின் பச்சை பிளாஸ்மா.

இவ்விதம் தூங்கும் பெண்ணாக கனவுகளின் பிடியில் நகுலனோடு இருக்கிறது மறையியலாக உள்ள வரிகளிலோடும் நாயின் லொங்கோட்டம் கையெழுத்துச் சுருளாய் ஊளைகள் இரவு படிந்த வடுக்களாக கோடுகளாய் கவிதையின் க்ரியா சக்தி ஒளிப்பளபளப்பில் வாள்களாக பெரும்போதை வரைபடங்களை சுருட்டாகப் புகைத்து ஆவிவர கடவுளின் பேரில் ஹாக் மதுவையும் சோடாவையும் கலந்து குடித்த காத்திர விஷயமான பைரனும் நகுலனும் எந்த வீதியில் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லையென தெருநாய்களும் கூறி மறைகிறது தெரு. பைரனைக் கூட்டிக்

கொண்டு பின் தோட்டத்தில் இருவரும் நிழல் ஒளிகளுக்கிடையே பிராந்தியை கடித்து நாவலைத் திறக்கிறார்கள்.

பாளயத்தில் பிராந்திக் கடைக்கு உலோக வேட்கையாளன் கவிஞர்களைக் கூட்டிச் சென்றதில் வழக்கமாய் அந்த புட்டுக் கிழங்குக்காரி மரவல்லி ஆவிக்கிடையே 'உன்ன எனக்குத் தெரியும்..... உன்னத் தெரியத்தான் தெரியும்... வா உள்ளே... புட்டு வேணுமா புட்டு..... உடையாத புட்டு' ஜுலாய்களில் புகைவளையும் ஆவிமேல் 'நகுலன்' . 'நன்னா குடிச்சியா...' சேரனின் பிரம்படி பட்டதோ அனந்தபுரியென ஜிங்லி ஜிங்லி ஜிங்லி பாடல்பாடி மஞ்சள் நிற பித்தப்பூப் பரவ சுடுகாட்டில் புதுமைப்பித்தனும் இவ்வூர் எழுந்தான் ஆவியாக. அவன் துக்கம் கேட்டு எட்டு பேர். இவன் துக்கம் அ. மாதவன், நீல. பத்மநாபன், சுகுமாரன், தசமுகனும் துக்கம் சுமந்து இறங்கிவிட்டான் லங்காபுரியிலிருந்து. இப்படி நாலுபேர். கேதப்பட்டது அனந்தபுரி அளவிறந்து.

'சூசிப் பெண்ணே... சூசிப் பெண்ணே... காடை கட்டினால் பாடை கட்டும்' எனக்கூறி பாசாங்காய் ஏமாற்றித் திரும்ப பிரமை அவள் தோற்றங்கண்டு ஆட்டோவில் கூட்டிச் சென்றதம்பானூர் ஒயின் ஷாப்பில் கவிஞர்களைச் சுற்றி தன்னில் சுழலும் மேஜை; பேசிக் கொண்டிருக்கையில்....

'வேஸ்ட் லேண்டில் எலியட்
கங்கை ஆற்றின் நினைவை
எழுதியது
யேட்ஸின் கவிதைகள்
எங்கும்
தனிப்பட்டதாகப் பரவியது
ஜாய்ஸும் மில்டனைப்
போல் குருடனென்பது
டிலான் தாமஸ் தனது அற்புதங்களை
கவிதைகளாக்கி விட்டு
அமெரிக்காவில்
குடித்துச்
செத்தது....
இவையெல்லாம்
வளையமான உலகிலுலமும் உன்
ஆச்சரியமாக இருக்கிறது நமக்கும் தானே!'

கெட்ட சகுனம் பார்த்து சோழ அவை விட்டு ஒட்டக்கூத்தனும் தகடூரிலிருந்து அதியனைப் பிரிந்த ஔவை 'சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே / பெரிய கள் பெறினே யாம்பாடத் / தாம் மகிழ்ந்து உண்ணும் மன்னே' என ஒட்டனைக் கூட்டிக் கொண்டு நாடு நாடாய் குடித்துப் பாடி நகுலனைத் தேடிவர ஔவை கால்பட்ட இடமெல்லாம் நெடுவாலப் பனைகள் இருந்தன இன்றும்.

'நான் எப்போதும் இறந்து போன ஒருவரது எழுத்தை வாசிப்பதையே விரும்புகிறேன்.... வயது கூடக்கூட எனக்கு அதிகம் உறுதிப்படும் விஷயம், மிகச் சிறந்த புத்தகங்கள் யாவும் இறந்துபோன எழுத்தாளர்களுடையவையே. ஒருவேளை சிறந்த புத்தகங்களின் ஆசிரியர்கள் உயிரோடிருப்பின், அவர்களது இறந்த ஆவிகளது இருப்பாகத் தோன்றுகிறது. இதனால்தான் பெரும் எழுத்தாளர்களைத் தெருவில் காண்கையில் தொலைவே இருந்து அவர்களைக் கண்டு வியப்பெய்தும்போது, நம் கண்களையே நம்பாமல் அவர்களை ஆவிகளெனக் கருதி அருகே செல்லாமல் நின்று விடுகிறோம்' என்ற ஈ மெயில் ஒன்று கடந்த வருஷம் நோபல் பரிசடைந்த ஓரான் பாமுக் நகுலனைப் பற்றிய இரங்கல் செய்தியில் முழுவதுமாக இறந்து போய் சடலத்துக்கு இலக்கியம் மூலமாக உயிரூட்ட முயல்வதாக தன்னையும் இறந்த நிலையில் நகுலனைப் போல் இறந்தபடி எழுதிக் கொண்டிருப்பதாகவும் நகுலன் மட்டுமே காலம் குறிப்பிடமுடியாத ஆவிகளின் புத்தகங்களாக மாறிவிட்டவர் என மேற்படி இரங்கல் செய்தியில் சூசகமாகத் தெரிவித்து இந்த என் முடிவை பொதுவாக பலருக்கும் தெரிவிக்க வேண்டியதில்லை என நகுலனைப் போல் தனிப்பட்ட பிராணபயம் கொள்கிறார் ஓரான் பாமுக்.

பித்தனும் பிரமிளும் நகுலனும் இல்லாத காலை விடிந்த போது நகுலனை சாதலென்னும் சாமுடிவரை பயணமான அட்டமாசித்தி பெற்ற சித்தர் எனச் சிலர் கூறதன்கையில் வறுமையும் விரல்கள் எழுதப் பிழைத்திருக்கும் பித்து எனக்கூறி மறுத்துவிட்டார் நகுலன். ஆவி வருந்த மூங்கில் புதர் அருகில் பனியுதிர பச்சை நண்டுகளைச் சார்ந்த பரிதி கூர்கதிர் கொண்டு கீழிறங்க மற்றொரு புறத்தில் வீசும் காற்றில் தன்னை விட்டு வெளியேறி இப்படி நான்கு பக்கமாய் உலகத்தில் உள்ளவர்க்கு சொல் என்ற இப்பஞ்ச பூதியம் ரஸநாளங்களில் ஓடுவதை அருட்பாவில் வள்ளலாரிடம் கண்டிருக்கிறேன். சூதத்தின் வடிவத்தில் பொங்கிய நிறம் ஏழாம் அத்திரைகள் சுருள்படச் சுடரும் நிலப்பொன்மை ஏறிய நிலாச்சரீரம் தரித்த இவ்வுடல் உப்பினால் துவர்த்திருக்கும் ஊற்று. செம்மண் விரல்களில் விரிந்த அனந்தபுரி மலரென எரிந்து கொண்டிருக்கையில் என் புத்தகங்களும் செம்மண் திறந்த இவ்வூர் என எதேச்சை கொள்கிறது. ஜாய்ஸ் உடல்கதை நிலமானால் அவன் மீது தான் டப்ளின் நகரம் சாம்பல் கோட் அணிந்த பனி உதிர்த்து வீக்ஷிசி க்ஷிசிபும் கதையின் காமத்தின் பனி இரவென லிசா மெல்ல மெலிந்து சில்லிடும் பனி ஊசிகள் குத்திய வைலட் கோட்டுக்குள் சுரோணிதத்தில் கண் முளைத்த அகால முகையென அந்தரங்கத்தில் வயிலட் கல் ஒன்றைக் கீறி எடுத்து மைக்கேல் ப்ரே ஜாய்ஸின் வீரிடும் பனிக்கத்தியால் தன் விழிகளைக் கீறி அவளிடம் கவர்ந்த வயலட் கல் ஒன்றை கண்களாகத் தைத்து மறைகிறான் உறைபனிக்குள்.

'என்ன... நகுலன் உங்கள் எக்ஸ்ரே படத்தில் புத்தகங்களின் ஆவி தான் தோற்றமாகிறது எனக்கு' என பிரமிள்.

'கோட்ஸ்டாண்ட் கவிதைகள் எப்படி' தூண்டுகிறார் ஆனந்த்.

'அவை ரேடியம் மற்றும் மூன்றில் வரும் ஜடாயு உலோக ரெக்கை பெற்ற நகுலன் தான். ராவண சோகம் அவதாரங்களைப் புறந்தள்ளி நகுலன் தசமுகனாகி சனாதன உடலை உரித்துக் கிளம்பியது' கைகளை விரித்து அபிநயத்தில் பிரமிள்.

‘சரிசரி அப்படியா’ தி.சோ.வி. தலையாட்டுகிறார்.

‘ஈராயிரமாண்டுத் தமிழ் கவிஞனின் முழுஉடலும் ரோகமாகி ஆழத்தில் புதையுண்ட உலோகங்களும் கெம்பு ரத்தினங்களும் சிதறி உதிர்கின்றன. உலோகங்களின் ஓட்டம் குகைகளில் மாறிமாறி மொழியை வேறொரு மணல் கேலக்ஸியாக மாற்றியுள்ளது. என்ன ஆனந்த்... விஞ்ஞானத்தின் முழுஉடலும் நிலவிலுள்ள வெய்யிலை அளக்கிறதா இல்லையா?’

‘சரி... அப்படியென்றால் சித்தர்களின் ஹடயோகம், ஷடாந்தம், வள்ளலாரின் ரஸவாதம் – கண்ணாடியில் காட்சி பெறல், ஔஷதங்களில் ஓடும் நோய் நீக்கும் குணநாடிகள், ராவணனின் அரக்கப்பிரகாசிகை பரிபாஷைகள். ஓஷந்தியில் மறையும் நாழிகைகளிலுள்ள விண்மீன் கண்களின் உரையாடல்’.

மதுக்குவளையை மெய்ஞானத்தில் அசைத்தவாறு நகுலனைத் தொடர்ந்து திறக்கும் உரையாடல் நவீன மொழி மரபாக மாறிவரும் தமிழ்க்கவிதையில் மூழ்குகிறது. உலோகப் பொருள் கவிதையின் ஒரு படிக எல்லைக்குள் மற்றொரு படிகம் இருந்து மேவர நுவல பூதப்பிரிவு வரிகள் மென்சாயலில் அகம் புறமாகி மெய்யுரைத்த கவிகளின் பித்து அலைந்தலைந்து மண்களில் மறுகி உலர்ந்து வந்த மணல் கூடு கல்பொறு சிறுநுரை போல கவிதை குளிர்ந்து முதிர்ந்தது மௌத்திகம். உலோகங்களைப் போலவே நாம் துயரார்ந்த லாவா. கவிஞர்கள் உடலுக்குள் புதைந்திருக்கும் அதிசயக் கற்கள் சங்கக் கவிகளின் திணைப் பரப்புகளில் கற்களின் உலர்ந்த விரக்தி, சாம்பல் நிறம் பூசிய கற்பரந்த தனிமை, செம்பராட்டங்கல் திருகிய உலோகம் கக்கும் செங்களிப்பு, சப்தமெலாத கற்கள், கவிகள் கால்பட்ட இடமெல்லாம் திரிந்து அலையும் பேய்க்கல். உருவழிந்த சிலை ஒடிந்த சிதிலங்களின் புதிரில் சூன்யம் மின்னல்படத் தோன்றிய உருவங்கள் மிகவும் கல்லாகி ஊழ்வரையில் கிடந்த தமிழ் இடிவிழுந்து உருண்டு முதல் கல்லில் தன்னைத் தான் சிருஷ்டித்துக் கொண்ட கவிஞன்.

‘போகருக்குத் தக்கதோர் பெண் தேடிச் சென்ற கொங்கணவன் மலைமுழைஞ்சில் வேரிமிர்ந்து சீரிய சிங்கம் விழிப்புற கருங்கற் பெண்ணொருத்தி கீல் எண்ணெய் பூசி முலைத் துளையில் பால் பிழிந்து சிசுக்கள் மொச்சும் ஒலிகேட்டு அவளைத்தான் சுசீலாவென கூடச் சென்ற நவீனச்சித்தன் வஜ்ரோலி முத்திரையை பதினெட்டு சாவிகளால் அங்கம் திறந்து தாய்ப்பாறை பிளவுற்று மீட்டி அழைத்துப் போகிறான் கஞ்சமலைப் பிரம்மயாளி ஒருவனின் துணையுடன். இந்தக் கஞ்சமலை யாளிச்சித்தன் யௌவன பத்ர இலையை நகுலனுக்கு மகா வாக்கியமாய் கொடுத்ததில் மீண்டும் இளமையாகி...’ பெரிய ஞானக் கோவையை புரட்டுகிறார். வைத்தியம் மனக்கலக்கம் நீங்கும் வெள்ளி இழைத்த கல் எழுப்பும் ஒலியில் மெலியும் மழை மரம் காற்று.

‘நவீனத்தின் அடுத்த கட்டத்தில் உலோக மொழியுடல் க்ரிப்டோ நூலகமாய் உதிர்கிறது’ என எரியும் நூலகத்தின் மீதிருந்து வெண்கலப் பூனை யேந்தி பாலை நுழைகிற நகுலனைத் தேடிய கபிலம்.

அதில் சீனர்களும் இருப்பார்கள். யுகங்களின் உலோகப் பிரிவுகளை தனிமங்களிலிருந்து களிமண் வெண்மைக்கு தத்துவ முலாம் பூசியவர்கள். விரல்களில் வார்த்தை சுட்ட பீங்கான் ஓவியங்கள் அவற்றில் தூங்கும்பனி, தேனீர், காஃபி வாசனைகள் மலைத்தொடர்களாய் சங்கிலிக் கற்கள் கோர்த்த கலையின் தோற்றும் சீனாதானே' என பாலை.

'சீனாவிலிருந்து விசா பாஸ்போர்ட் இல்லாமல் சென்றுவரும் போகருக்கு' நவபாஷாண சத்தகாண்டம் கலவைகள் ஒன்றையொன்று உருகும் நிலையில் காடுகுளிரலையலையாக குளிகைசெய்த பற்பங்கள் மூலிகை நாழிகை சிருஷ்டி செய்த சேயோன் சிலையுரு சேவல் வந்து சொல்ல ஊரெல்லாம் கண்சிவக்க வாதைகளும் நோவும் வருத்தங்களும் காலெடுத்து ஓடிய அவலங்களில் பித்து அலைந்த ஜனக்கூட்டம் தத்தம் வழியில் நபவாஷாண சிற்பத்தில் தன் உலோகம் கொடுத்து உரித்து சோத்த பெருந்திரள் மொழி.

'ம்யூசியம் படைப்பாளியை எதிர் கொண்டதில் நாற்பத்தியொரு புடமிட்ட பொன்கலவை மொழியாகும் கலாந்தம். பொன் உருகியோடும சுரங்கத்தில் நீட்ஷேயின் பாம்பு நெளிவுக்கத்தி. தத்துவப்புடமிட்ட உலோகங்கள், கருத்துருவ அச்சு வெள்ளீயம், சரித்திரம் தொலைத்த யோனிப்பூட்டு, களிம்படைந்த வானம்பாடிப் பித்தளை உலோகம் கவிதையில் பித்து அலையாமல் சரிந்தவை இவர்களுக்கு பித்தே தளையாகி விட்டது. பின்னே அவை பிளாஸ்டிக் பூக்களாகவும் பாலித்தீன் விளம்பர இலாகா, அரசு செய்தித்துறை, மத்தியதர வர்க்க எவர்சில்வர் கவிஞர் கூட்டம் தினசரி தகர உத்யோகங்களில் அமர்ந்து நாக்கைப் பித்தளைப் பூட்டுக்குள் மடித்ததும் தானே ... தன்னானே...' என லஷ்மி மணிவண்ணன் கவிஞர் ம்யூசியத்தில் கலகம் புகுந்து தலைச்சீரா, உடல் கவசங்கள், துப்பாக்கி, வார்த்தைகளின் துரு, களையான் நாவலைத் திறந்து துருப்பிடித்து அழிக்கும் காலத்தை ஏவுகின்றார். 'எதிர்ப்புகள் மறைந்து தோன்றும் இடம்' கடந்து தன் கவசகுண்டலங்களையும் நாகாஸ்திரங்களையும் ம்யூசியத்தில் ஒப்படைத்துச் சென்ற நிர்வாணம் தோலுரிக்கப்பட்ட கவிதையில் தொடங்க ' வெட்டுக்கு நிற்கும் மாடுகளின் முன்' நகரப்புதைச் சேற்றில் சிக்கி வெளியேறும் மண் குரல் கடந்து செல்கிறது ம்யூசியத்தை.

' உங்கள் கையில் எந்த ஆயுதமும் இல்லை எனில் கவிதை இருக்கிறது அத்தனை டன் எடையுள்ள கவிதை ரேடியம் அரிய உலோகம்' என்று திரும்பிப் போகிறார்கள் நிராயுதபாணிகளாய். திருவீழிமிழலை வௌவால் மண்டபம் நகுலன் எனப் பிதிரா சொன்னதும் கிரீச்சிட்டுப் பறந்த இருட்டு தொங்கிய மரங்களில் பழந்தின்னிகள். மரத்திலிருந்தவாறு செம்போத்து கவிஞர்களோடு மொழியின் உலோக அலோகங்களுக்குத் தாவியது.

'முதற் சங்கத்தில் அசுரரும் கொடூரருமான அரக்கக் கடவுளரும் ரோகமாய் உதிர்த்த பொன்னும் வெள்ளியும் தாமிரசபையும் நிருத்தம் சித்திர மாடத்துத் துஞ்சிய சடையும் புலவர்களாய் இறையனாருடன் அமர்ந்த கடைக்கோடு' என்மனார் புலவோர் என கற்பிதப் புலைஉடல்கள் பிளந்து குமுறி பரிதி விம்மிய உலோகப் பாறை கலந்த தொன்மம். தொடரலாமா?'

'போதும்... போதும்... கோட்டானைக் கூப்பிடு செம்போத்தே' என மதி எனும் கவிஞன் காதை பொத்துகிறார். ஒரு கனியை மாந்தியுண்ட பெரிய வெளவால் கொட்டையைத் துப்பியது. ' கீழே தரித்திரம் பிடித்த புலவர் கூட்டம் வருகிறது' என கவிகளை அலட்சியமாய் விளம்பிட

' உடல் விதைக்கவோ வளர்க்கவோ
யாருமே இல்லாது
பாழ்நிலமாய் உலர்ந்து வெடிக்கிறது...
எச்சத்தில் ஊறிய விதையை
பறவைகள் வெளிக்கிட்டுப் பறக்கின்றன'

எனும் குட்டிரேவதி கவிதை கேட்டு நழுவித் தப்பிய அப்பாழ் மண்டப வெளவால் தனியே இருட்டில் கோடுபோட்டு சிரித்துக் கொண்டே யாருமற்ற பிரதேசத்தில் சரிந்தது.

அவ்வேளை 'செம்போத்து வலமானால் கவிஞர்களுக்கு சம்பத்துண்டாகும்' என கண்டராதித்தன் கூற மற்றவர்களைக் கடைக்கண்ணால் ராணிதிலக் திகைக்க கடலுக்கு ஏவப்பட்ட நதியொன்று சலசலத்ததை ஏன் கேட்க முடியவில்லை? 'எல்லோரும் அக்கரைக்குப் போவோம். மதுரமாய சொப்பனத்தின்டே கள்கிட்டும்' என்றார் மலையாளக் கவி அய்யப்பன். உடனே 'போகாதே... போகாதே... யாருமில்லே' எனக் கிரீச்சிட்டது திரும்பிய வெளவால். 'இதென்ன?' நட்டாற்றில் முழங்கால் நீரில் நிற்கும் போதையிரவுடன் கவிஞர்கள். உருளும் கற்களுக்கிடையே அனந்தபுரியில் சயனத்திலிருக்கும் பத்மநாபனை பைநாகப்பாய் இடறிவிட்டு நழுவி நதியாக தெளிந்ததில் 'நழுக் கென்றது சர்ப்பம்' கால்பட்டதும் நகுலன் 'சாதாரண பூச்சிகளும் பறவைகளும் அற்று விடுமானால் உலகம் வெறிச்சென்று விடும்'

'கட்டோடே போனால் கனத்தோட வரலாம்' எனப்போதத்தில் தள்ளாடிப் பேசும் இருட்டு. பிரமிள் நகுலனைப் பிடித்துக் கொண்டு காதோடு காதாய் 'பயப்படாதீங்கோ... வெண்டலைக் கருடன் சென்று இடமானால் எவர் கையிற் பொருளும் தன் கையில் சேரும்' எனச் சொல்லிய போது சொல்லில் எல்லோரையும் சுற்றிப் பார்த்துக் கொள்வதாக பாவனை

ஆற்று நீரைப் பறந்தபடியே பருகும் விச்சுளிப்பறவை வலமாயிற்று. 'இதற்குள் என்ன உலோகம் மறைந்திருக்கும்?' என என் டி. ராஜ்குமார் பட்சிகளின் சுழற்சியைக் காட்டினார். காட்டாளன் கைதட்டிக் கைதட்டி வெளவால் கூட்டத்தையே கள்குடிக்க அழைக்கிறான். ' பிரமிளுக்கும் நகுலனுக்கும் இடையே இந்த பூவாந்திர உலோகநதி அக்னி ஆறாய நுரைததோடுகிறது பார்...' மொழியின் சங்கேதங்களை கிறுக்கிக் கிறுக்கி இருட்டைப் பெருக்கும் ராப்பூச்சிகள் நிசப்தத்தை வளையிட்டு அதிர்கின்றன.

போதையின் தள்ளாட்டத்தில் ஒட்டக்கூத்தன் கவிதையின் பல தாள்களுள்ள பூட்டைத் திறந்து 'விச்சுளி வலமானால் நிச்சயம் வாழ்வுண்டாம்' நாற்றிசை திரும்பிய கவிஞர்கள் கற்பரந்த இருக்கைகளில் அமர்ந்து வாதிடத் தொடங்கினார்கள். பஞ்ச குணங்களைப் பேசிப்பேசி நீர்மேல் திரியும் படகென கிருஷ்ணப்பருந்து கதையாளராகி ஆ. மாதவன் கூட்டத்தை விட்டு விலகித் தனியே அமர்ந்து கொள்கிறார். கவசங்களின் உரையாடல் 'நம்மை ஏன் சென்ட்ரல் ம்யூசியத்தில் விடுகிறார்கள்' உடனே அரிஸ்டாடிலின் குறுங்கத்தி பேசியது 'எல்லோரும் படைப்புக்கு வெளியே நெஞ்சை நிமிர்த்த முடியாமல் கவசங்களை அகற்றுவார். உள்ளே வரலாம் வெளியே போகலாம்' என்றது.

'பாஞ்சாலி - சபதம் புனைந்த ஐந்து உலோகங்காய்ச்சி பாண்டத்தில் பிரித்து வந்த அக்கினிக்குஞ்சே தான் குயில் கோட் அணிந்த ரஸவாதி' என பா.வெ.

'நகுலனைப் புடமிட்டதில் சிவப்பு, மஞ்சள், கருப்பு நிறங்களுக்கு வந்து சேர்கிறீர்கள்' ஏடு திறக்காமல் புலிப்பாணி சொன்னதில் பிழையும் உண்டோ.

'நிராகதி அடைந்த எலும்புகளும் சடங்குகளும் கவிதைக்கு உலோகம் தான்' என நாடகக்காரன் முருக பூபதி 'எலும்பு நினைவின் மனப்படிவப் பரப்பில் உலோகம் தான் கவிதை நகுலனுக்கு... வெள்ளிக் கண்பொடி தூவியதில் பளிச்சென்ற வெள்ளிச் சலாகை நகுலனின் உலோகம்' எனவும்

'ஷேக்ஸ்பியர் ஒரு இரும்பாலான அலகு முளைத்த காக்கை, இளங்கோ இசை உலோகங்களின் லாவா. ராகபுட முறையில் வெளிவந்த மாதவி, கோவலன் இசையில் பைத்தியம் பிடிக்க கானல்வரியில் மாதவி ஓர் அணங்கு எனக் கண்டு கடல்கோளுக்கு முன் பூமியின் மைய ஓட்டத்தில் மாறுபட வெளியேறிப் போன இவன்; பாண்டியன் வெண் கொற்றற் குடை உலோகம் சரிய வீழ்ந்த சிரச்சேதம் பட்ட கோவலஞ்செட்டி உதிரமெனும் செவ்வுலோகம் அவள் ஒருமுலை புகுந்த நெருப்பு பழந்தீயில் ஆடும் அறியப் புதிரான உலோகமவள் என்பதை ஜெயமோகன் சொன்னவாறு. குறுக்கிட்ட மதி எனும் பூர்வ பௌத்தன் 'மேகலை வெண்பளிக்கறை, படிக பிரமிள், சொர்ணவயல் பெண்கவிகள், நகுலனின் வெள்ளி இறக்கை, நிலவின் உலோகம் வெள்ளி எனவே நகுலன் ஒரு வெள்ளி வட்ட நிலவு, கூடவே நகரும் கடல் எலும்பு பிரம்மராஜனும் ஹெமிங்வேயும், சோகமான பூதவேதாளம் அருணகிரியும் நாராயணத் தாத்தா கட்டைக்குழலும், பேயுருக் காரைக்கால், கண்ணாடிப்படம், உலோக ஆடி, காப்பியமும் அகப்பாடலும் மறைந்த கற்களின் சாம்பல், செம்மை, கருப்பு, பச்சைக் கல் ஒளிரும் உத்தரகோசமங்கை ஈசன், தங்கத்திமிங்கலம் உரசும் தனுஷ்கோடிப் பட்டணத்தில் ஸீகலின் பொன்முட்டைகளை உருட்டாதே வாசகா' 'மதி... மதி... அப்படியானால் உங்கள் கவிதையில் சிறுவிவரங்கள் கூட முழுக்கதையையும் சொல்லிவிடும். எதிர் உலகில் நின்று பார்த்ததில் எல்லாம் குறியீடுகள், புள்ளிகள், கணிதவியல். உலோக பரிபாஷைகளைத் திருப்புவோம்' என வளர்மதி, மதி எனும் கவிஞனை நோக்கி சொல்லிவிட்டு' பிரமிளின் கவிதைகள் இராத்துப் பாறையெனும் வல்கனோவில் உறையும் சாதரூபம், கிளஞ்சிறைதோட்டிகளின் இதயம்தான் செம்பொன் மதியில் விளிம்புகசியும் குருதிதோய்ந்த வாழ்புராணம் இனியொரு அகப்பாடல்'

'அங்கே காடை கட்டிற்று கள்ளுக்கடை முற்றத்தில். அது நோக்கி ஒட்டன் 'ஊழியின் மணல் புள்ளிகள் தான் காலத்தின் எந்தத் துகள்களும். நாய்கள் நாவலே மணல் கேலக்ஸி. நிறம் அற்ற ஒன்று மணல் வடிவம் கைவிட்டுக் கடந்து கொண்டிருக்கிறது' என்றான் ஈட்டி எழுபதில். உடனே 'சற்றே பொறுங்க... இந்த ஏதுமற்றதன் நிழல் கூடவே இருப்பதை எனக்கு கண்டு பயம்' அதற்கு பிரமிள் எழுந்து நின்று நகுலனிடம் குனிந்து 'கட்டுக் காடை இடமானால் கழுதை புதைந்த குட்டிச்சுவரும் பொன்னாகும் அல்லவா?' என்றதும் உலோகங்களைப் பேசும் பிஸ்மார்க்கின் கழுதை தாளைத்தான் உருட்டி கபாலத்தில் உருவி அக்ரஹாரம் கடந்து செல்ல மஹாராஜா வீட்டுக்கு அடுத்த வீட்டில் கவுடியார் கிழக்கு சரிய நெடுக தங்கப்பற்கள் சிரிக்கும் பிஸ்மார்க் விடைபெற்றது பாதையை காட்டி மேலேறி வந்த பட்டு முசுக்கட்டை மரங்களின் இலை வடிவில் நூற்று நூல் சுற்றும் அரூபத்தில் கரையும் அனுபூதியில்

தூங்கும் பூச்சிகள் நிர்ஜனமான கனவின் தோற்றத்துள்' மிதந்து ஊடுருவி பயத்துடன் கவிஞர்களும் எத்தனையோ வர்ணங்களில் கபிலம் கொண்ட பட்டு மென்மை கசியும் ஒளிநிலவு மங்கிய பாதை அலையலையாய் நெய்த இருட்டு நூல் பட்டு நூற்கும் அனாதையாக ஏங்கி மெலியும் சொப்பனப் பூச்சிகளாய் இவர்களும் சாயையென சுசீலா நகுலன் செவியில் முணுமுணுக்கிறாள்.

மொழி உலோகங்களாய் மாறிவிட்ட நவீன கவிதையின் பரப்புக்குள் மொழியானது ஸ்படிக உடலாக ஒருவேளை உலோக எலும்பின் பழுப்பு நிறக் கவிதைகளை கடைசி டினோசாரின் அதீத உறுப்புகள் எனச் சொல்லிவிடலாம். 'ரத்தத்தில் மிதந்து வரும் பித்தப்பூவை கண்களால் பறி' த்தெடுக்கும் டினோசார் அற்புத உலோகத்தேடலின் புதிய ஊழியில் ஜனனத்தை சொல்லா நின்றவாறு.

' தேவதர்சன் கவிதைகள் புதிய ஊழியின் நவீனப்படிகமாக உடலற்ற ஆவி நூலாக மாறிவிட்டதா நேசன்'

' தமிழின் மரபுப்பிரதிகள் நிலத்தின் சாற்றில் ஆயிரமாயிர தனிப்படிகங்கள் உலவும் கனவு மீட்சி மன உலையின் வெப்ப விளை மொழியில் உலோகங்களின் மணல் நூலகமாகிறது' என நேசன் பெருந்தேவியிடம் திரும்பிச் சொல்லவும்,

'அப்படியென்றால் உடலை வெண்கல ஆவியால் திறந்து நவீனப் படிகக் கரைசலை விரல் விளிம்பின் நகர்த்திச் செல்ல மொழியிலிருந்து உடலையும் உரித்துப் போட்ட பின் பிராணனையும் மாயத்தில் கதிக்கும் பறவைகளின் பாஷைகளை திருப்பித் தரமுடியாத கவிதை சொல்கிறார்' மணிக்கிளிகளின் கூண்டுடன் வந்த பெருந்தேவிக்குப் பின் விச்சுளிப் பறவையெனக் குறுக்கிட்டுச் சொல் பகர்ந்த 'கடலோரத்தின் வெளிர் நுரையிலும் உலோக நெடிகுழையும் நீல நெருப்பு' என உமா மகேஸ்வரி செல்கிறது.

'உப்புக் கடலுக்குள் மூழ்கிய பாய்மரக் கப்பலின் தங்கப்பாளங்களின் நூற்றாண்டு மௌனம் ஒல்லாந்தரின் உலோக ஆணி தைத்த கிறித்தவச் சடங்கின் சிலுவைக் கப்பல் பைசாசப் பாய்புடைத்த சூறாவளித் துறைமுகத்தில் வந்து சேர பாதிரித் தமிழின் பெயர்ப்பில உருவுடைந்த வேத நூலின் பொறகோடு பூசிய தாளின் இழை' என மணப்பாட்டில் சேவியர் குகையில் இருந்து பைபிள் விளிம்பின் உலோக மொழியை நீட்டினார் ராமச்சந்திரன் நகுலனிடம் எஸ்தர் என்பவளின் சோக இருட்டை பைபிளுக்கு உறையாக பொத்தி 'குளத்துப் புழா ஆறு' கவிதையானதில் இந்த ராமச்சந்திரன் நகுலனின் ராமச்சந்திரனிடம் 'நவீன கவிதைப் பரப்புகள் பல தோன்றி உலகின் விளிம்புகளில் நாம் எங்கிருக்கிறோம்' என்றதும்

நகுலனான சூரல் நாற்காலி - எழுதும் முறை ரகஸியங்களை 'சுசீலா...' எனக் கூறிவிட்டு 'வாழ்வைப்போல் மரணமும் தனி ஸ்திதியில் அவரவர் மறையும் புதிர்.... ஏனோ 70க்குப் பின் மௌனம் நகர்ந்து நகர்ந்து நாவல்கள்' என 'உயிர்மை' சொல்கிற வேளை ஆவிகளின் கையெழுத்திட்ட படிகளையும் ஜின்களிடம் கைப்பற்றிய காகிதங்களையும் சூஃபிகளின் இலைகள் சருகுறும் மெய்யறிவினையும் 'பட்டுப்போன ஆரஞ்சு மரத்தின் கவிதை'

கிளைகள் காய்ந்திருந்தும் குச்சிகளை ஒடித்தால் ரத்தம் குமிழ்கிறது எனக் கூறிய ஹாமீது 'என் கல்லறைவாசகம்'.

'இங்கே
யாருமில்லை
நீங்கள் போகலாம்'

'நாய்கள்' நாவலின் நீர்தான் தைலஉயிர் கொடுக்க ஊளைகள் விண்கோள் ஒன்று சிதறியதென கோடுகள் சரியும் வேகம். ஜ்வாலையில் நகுலனின் மெலிந்த ரேகைகளை ஹவியிடம் நீலம் கொள்ளும் சிருஷ்டிதம். கடைசி டினோசார் 'க்யெக்' பறவை என்ற தனது ப்ரீப்கேஸைத் திறந்ததில் அதனுள் நகுலன் சிருஷ்டி ம்யூசியமான 'மகாராஜாவின் அன்னை வீடு' படகில் ஏறுவதற்கு முன் ப்ரீப்கேஸை நீருக்கு அருகில் விட்டுச் சென்றதில் வெள்ளிமீன் உட்செல்ல வீட்டுக்குள் மூன்று தங்க மீன்களும் தாவி இறங்கி கோட் ஸ்டாண்ட் கவிதைகளைக் கரும்பிக் கிழிக்க பிதிர்ந்த நூல் 'மங்கலாக மயங்கிக் கிடக்கும் / தோற்றம்... கையெழுத்து மறையும் வேளை.... மீன் முளைத்த கோட் கடலாகிறது. 'பிரம்மலிபியும்' ... பிரம்மயாளியுடன் வரும் டினோசார். 'நான் முதல் அம்பும்' குப்பிகளைக் கீறிக் குடித்த நகுலன் வீட்டையே பருகியவாறு 'கையெழுத்தும் தோல்காணாக்/கண்ணேபோல்/ மெய்விதிர்க்க நின்றவரும்/ நின்பொற்பின் முன்நிலை தளர / சிலைமுன்...' அம்பைக் கீறின முதல் ஆள் இரவின் உச்சியில் இறங்கி சில காகிதங்களை யார்மீதும் விரோதமின்றிக் கீறிக் கசக்கி மடித்து பிரம்மயாளி கக்கும் நெருப்பில் புதைக்க நீல ஜ்வாலையில் விரியும் மனல். அதைப் பார்த்துவிட்ட நகுலன் முதலை எனும் புத்தகத்தை திருப்பித் தரும்படி கேட்டார். பிரம்மயாளி தரமறுத்துத் திறந்த யாளியின் பிரம்மலிபிகள் செதில்களில் வெண்கல நரம்புக்குரல்கள் உதிர்வதைக் கண்ட டினோசார் 'பிரம்மா.. உம்முடைய விலாவின் பக்கம் கடல் எலும்பை உருவித்தர முடியுமா? எலும்பின் ஓவியங்கள் கவிதையிலும் ஏற்கெனவே கனவிலும் வந்தது. 'முதலையின் கல்மௌனத்தைக் கலைக்கமுடியாது. பிரம்மயாளியின் பஞ்ச உலோகத்தினை உரித்து எழுதுகிறீரோ? சரிசரி... யென மன உலையிலிட்ட பரிதியில் சிதறிய கற்களை எடுத்து பரிசோதகராய் நாற்புறமும் கழுத்தைச் சுற்றித் திருப்பி டினோசார் தன்னைக் கடக்காமல் கடந்தபடி.

ஆத்மாநாம் சில ஸீஜுழிஷெதுவி சிகரெட்களைப் பற்றவைத்து பழுஞ்சுவரில் சாய்ந்து சித்திரம் உதிரும் நாவல்களின் மர்மமான வசீகரத்தை உள்ளிழுத்து நீலப் புகையாக வெளியேற்றி 'நவீனன் டைரி ஆட்டோமேட்டிக் ரைட்டிங் என்று பிரம்ம யாளி மீட்சியில சொன்னது. யார் கை மூலம் சுசீலாவின் கை எனவும் மாற்றம் வருகிறது. சுசீலாவை அடைவதற்கான ட்ராவல் தான் பிரதியாகத் திறக்கிறது.'

'ஒவ்வொரு நாற்காலி- அல்லது மேஜையும் அதைச் செய்தவனது சொரூபம் இருக்கிறது' என நகுலன் ஒரு Charms கேட்டதும் ஆத்மாநாம் புகையை வெளியிட்டு நீலப்புகை முகமூடியிலிருந்தே 'லூயி கரோலின் அற்புத உலகின் ஆலீஸில் மேட்ஹேட்டரிடம் எழுதும் மேஜை அண்டங்காக்கையைப் போல் உள்ளது ஏன்? இதற்கும்

அதற்கும் உலகமே வேறுபடும். அசேதனங்களைக் குறித்து நீங்கள் சொல்லியாயிற்று. நாவலில் படிந்துள்ள அசேதனங்களில் உயிரோட்டம் வேறு. ஆலீஸ் கேள்வி வேறு. பொருள் இதுவென மேஜை காணுமுன் தோன்றி விடுகிற நீண்ட அலகு அண்டங்காக்கை. மூக்கின் சாய் கோணம் Tell Taleக்கான கணிதம். மேசைக்கும் பிரம்மராட்சஸ் சடத்துக்கு சக்தியூட்டும் நன்னய பட்டன் நகுலன்'.

கள்முட்டிகளை உயரத்தில் பற்றிய கவிஞர் சிலர் கீழிறங்காமலே தென்னைகளை அசைத்து வாதிட மரத்துக்கு மரம் தாவி கள் கலன்களை சேகரிக்கும் சிறுபத்திரிகைக் கூட்டத்தின் உலோக உட்சொல் பூட்டியல் உலகத்தை விட்டே தனிச்சுற்றாவதுதான். விளக்குகள் அற்றநடுநிசியில் ஒளித்தைலம் பூசி வரும் சேரநாட்டு ஔவையுடன் கவிதாயினிகள் நகுலனை சந்திக்க வருகிறார்கள். அந்தப் பக்கம் சல்மா முகத்தைப் பார்த்தவாறு 'சுசீலா இன்னும் திரும்பவில்லையே. அவளிடம் விநோத கடிகாரங்கள் துடிக்கும் அசைவிருக்கிறது. எலியட்டின் 'தகர்ந்து சிதறிய படிமங்களின் / வெஞ்சூரியனின் துடிஅதிர்வு' நகுலனை எதிர்கொள்ளும் ம்யூசியம் தன்னிடமுள்ள வாளின் வெப்பத்தை அறவே இல்லாமல் அகற்றினால்தான் மகாப்பிரளயத்தின் இயல்பை அறிந்துணர முடியும் என்ன சொல்கிறார் நகுலன் என்பதை கேட்போமே' என மாலதி மைத்ரி பீடிகை போடவும்.

'மாலதி... இதையே வேறுமாதிரி நம்முடைய சித்த மரபில் குண்டலினியின் மூன்றாவது கண் மூலம் அறிந்துணர முடியுமல்லவா?' என்ற நகுலனின் கண்களுக்குள் ஆழ்ந்து நோக்கியவாறு மாலதி மைத்ரி 'ஆடக சௌந்திரியின் மூன்றாவது முலை, தடாதகையின் மூன்றாவது தன்யம் மறைந்தபின் மகாப்பிரளயத்தின் இயல்பை அறிந்துணர முடியுமென நம்புகிறீர்களா? சுசீலாவாக நீங்கள். எழுத்தை அத்தியாயங்களில் சில பெண் வாக்கியங்களில் கடந்து ஆண் வரிகளில் அலையும் நகுலன் நீங்கள்'

'மாலதி... நகுலனும் சுசீலாவின் பிரபஞ்சத்தில் நகுலனாக அல்லாமல் இருப்பதில் ஆண் பெண் உறபத்தியின் முடிவை சுசீலாவின் மணல் சேலக்ஸியாக நாவல உதிர்ந்து கொண்டு இருக்கிறது' என ரமேஷ் இருளை விலக்கி வந்து சொல்கிறார்.

'நகுலன் சிவானந்த போதத்தில்...
போதாது போதாது பொந்துக்குள்ளே
புலியிருக்குதென்னப் புகுந்து பார்த்தால்
வேதாளமென்றதொரு மயக்கந்தீரும்... சுசீலாவின் மௌனஉரு பேசும் பேச்சில் மூகாந்திரமானதில் அஷ்டமாசித்தி' என்று சித்த ஏடுகளை திறந்தது குட்டிரேவதியின் பாடபோதம்.

'துருவத்தைப் பிளந்து சமாதியின் சாம்பல் மரம் திசைவீழ் இலை. தனிமை நகுலன் கலை. சந்தித்தாயா சுசீலாவை நீ. ஆத்மாவை சருகாக்கி கைப்பிரதிகளாய் சிறுக்கிவிடும் பைத்தியம்' என சுகிதராணியும் வெள்ளிவீதியாரும் ஜோடியாய் நடக்கிறார்கள். ஜோல்னா பைகளிலிருந்த சுசீலா உரு ஓவியம் திறந்து அதன் பிரிவாற்றாமையின் அமானுஷ்ய செதிள்களை உதிர்த்து கற்கள் உருமாறும் பாதையில் வர ஒருபக்கம் செங்குத்துப் பாறைகள்

மறுபக்கம் செங்குத்தான மலைகள். முள்ளிலைகளையும் ஊசிமுனை கிழித்த காற்றின் குருதி பூசிய சிறுமலர்களையும் சிகப்புக்கனிகளையும் எடுத்து தருகிறாள். சமாதியின் சாம்பல் பரவிய தோற்றம் அசையும் அடிவான் புகை. அப்பால் பழத்தோட்டத்தை அடையும் இருவர் பிரதி தழுவிய சிறுமி சுசீலாவைக் கண்டதும் திறக்கிறார்கள் பையில் எடுத்த ஓவியத்தை. இருவருக்கும் அருந்தத் தருகிறகனி எது?

மணல் உறக்கம் கனி வீழ கனாநிலை விரியும் முரட்டுக் கம்பளத்தோட்டம் பிரதியின் நிழல்கள் அசையும் சுசீலாவின் கூந்தல். மரணத்திற்குப் பின் 'நினைவுப்பாதை சென்றடையும் நகுலராமாயணம் கடைசித் தோட்டம் போலும்.

எழுதப்படாத நாவலின் கடைசி அத்தியாயம் பிரிந்து சென்றவர்களின் காற்று சற்றே திரும்ப 'கைக்குள் அடங்கும் ஒரு சிறு / கருப்புப் பொடி பறவை / விர்ரென்று பறந்து செல்கிறது / வாலை உயர்த்திக் கொண்டு ஒரு அளவில்' உபயைத் தடவினால் மிச்சமிருந்தவர்கள் சொற்களில் இழந்ததை மீட்கும்படியாக இருக்கும் வெள்ளிவீதியார் கைப்பிடி உப்புவிதி விம்முதலாகி புஸ்தகத்தில் நீட்ஷேயின் அதீத மனிதப் புதிரில் வளைந்து நெளிந்து விளையாடும் வேதியியலாக வேறுபட்ட சுசீலா நகர்ந்திருந்தபோது தலையும் வாலும் ஒன்றேயாம் மண்ணுளி ரோக உலோகப் பாம்பு பிரிவாற்றாமைப் பாலையிலிருக்கும் நகுலனைத் தீண்ட வெள்ளிவீதியார் மருந்தாகும் சூரணம். கவிதையில் உரு மறுகுகிற ரசவாதமாகச் செல்லும் சுசீலாவின் உரையாடல்.

'முன்னோரின் சாம்பல் உயிர் தரும் பீனிக்ஸ் இறகு கரிந்த சம்பாதி நான் பார்த்தறியாத பறவைகளுக்கு சிறகுகள் அறுபட்டபின்... நகுலன் சிறகு மடித்து மறைந்தவற்றைத் தேடுமாறு ஜடாயுவென மூன்று' என கமரிய கண்களில் விரைந்தது மின்னல்.

'கமழும் பித்தப்பூ தொன்மம் பிரதிப் பழந்தமிழ் நிர்ஜனமாக ஒளியூட்டிச் சென்ற இக்கவிஞன்' என்ற இப்பறவை அரக்கு நிறம் காட்டியது.

நீரில் நடக்கும் சிவப்பு வரிக் கழுத்தை வளைத்து நனைக்கும் கருநாரைகள் ஜென் கவிதைக்குள் மறையும் இவையும் நகுலன் இறகை உதிர்த்ததும் காணாமல் போய்விடும்.

சிவவாக்கியர் கருநாரையின் முட்டையை கையிலேந்தி நகுலனிடம் காட்டியதில் புள்ளி கருத்தும் சாம்பல் பட்டும் வெளுத்திருக்கும் தனியுலகில் நர்த்தனமிடும் சிவப்புக் கழுத்தின் ஜ்வாலை முட்டைக்குள் முட்டையாகச் செல்லும் ' வானம் சிவந்ததடி! / வையகமும் மெய் கிளர்ந்ததடி'

' வாளுறையில் வாளடக்கம் வாயுறையில் வாயடக்கம்
ஆளுறையில் ஆளடக்கம் அருமையென்ன விந்தை காண
தாளுறையில் தாளடக்கம் தன்மையான தன்மையும்
நாளுறையில் நாமடக்கம் நானு நீயுங் கண்டனே'

'சிவவாக்கியர்... ரொம்ப காலமா ஆளையே காணோமே... நீ நான் எல்லாம் எழுதிண்டு இருக்கறச்ச தானில்லாத சாகரத்தில் தனிமையில் இருக்க நேக்கு பயமா இருக்கு... இனி நான் உன்னை விட்டுண்டு தேடமாட்டேன்' சிவவாக்கியர் கையைப் பற்றி காட்டாணி விரல்கள் எழுத்தாணியை தொட்டுக் கொண்டு இருப்பதை கைபற்றிச் சிரிக்கிறார்.

'நகுலன் சிகரெட் கொடும்' சிவவாக்கியர் இடை முந்தியில் அவிழ்த்த சடைக்கஞ்சாவை சாவதானமாய் அடைத்து எழுத்தாணி ஊசியால் குடைந்து நிரப்பி பாதசாரியின் வத்திப்பெட்டியைத் திறந்து குச்சியை உரச கடந்த நூற்றாண்டு வெளிச்சம் பாய்ந்த வனத்தின் காத்திர உருவம் கடுந்தேறலில் வெறியோடு ஆடுகிறது. சிவவாக்கியர் கைக்கூட்டுக்குள் நின்று எரியும் மெழுகுக் குச்சியின் நீலம் சாம்பல் நிறம் புகுந்த மஞ்சள் சுறங்கிய ஜ்வாலையில் திருமந்திரம் மறைதொனி திறந்தது. கருஞ்சடைத் துகள் பற்றிய புகைவேகத்தில் நெருங்கி வந்த கவிகள் புகை நடுவாகி ஈர்த்ததில் வட்டமான சக்கரத்தில் வாலை வந்து பேசுமே... 'புவனச் சக்கரத்துள்ளே பூதநாத வெளியிலே பொங்கு தீப வங்கியுள் பொதிந்தெழுந்த வாயுவை' புகைந்த வட்டம் வட்டமாய் சுருணை கொண்டு புகைந்த பாம்பு சுற்றிட

' உதிர்த்தெழுந்த வாலையு முயங்கி நின்றவாலையும்
கதித்தெழுந்த வாலையுங் காலையான வாலையும்
மதித்தெழுந்த வாலையு மறைந்து நின்றஞானமுங்
கொதித்தெழும்பலாகி ஹீயுங ஹீயுங் மானதே' வென சிவவாக்கியர் பாடப்பாட எல்லோரும் ஓர் குரலாகி கரைகிறார்கள் மந்திரத்தில். மெலிந்த புகை வனமாகி பசசை மரத்தில் காக்கைகள். காகபுசுண்டர் 'நகுலனே.... நாதமான வாயிலில் நடித்து நின்ற சாயலில் நானே தானே நகுலன் தானே நன்னானே' எனப் பாடிப் பறக்கிறார்.

கவிகளுடன் திரியும் நிலத்தின் சாரங்களும் பற்றிக் கொண்ட புவன மூலகமே நிழல்களாகப் படுத்தால் படுக்கும் எழுந்தலுடன் எழும்பும் சிலவேளை வரப்போகும் கவிதைக்கு முன்னதாக உணர்த்தும் சாதாரண இடத்திலும் அசாதாரணம் பெற்றுவிடும் நாடிகள் பைத்திதம் தொற்றிப் பரவுகிறது இலக்கின்றி நீரில். தாவரம் பூட்டி மிதக்கும் பச்சைக் கம்பள பாசி வேர் முளைத்த சிறகியென காலெடுத்து மாய வலைக்கண்ணிகளில் கால் மாற்றிப் பறந்து வருகிறபழனிவேள் 'நவீனா.. குறியீடுகளை உணாகிறேன் சிலவேளை. கவிதை எழுதுவதற்கான உந்துதல் பூரணத்தில் சொன்ன சொல் சூன்யம் ஆகி வந்த இருப்பென்று வந்து எதையாவது சொல்லிவிட்டால் விழிக்குமுன் வாாத்தையாகிவிடும். கனவுக்குப் பதவுரை சொல்லாமல் கனவுடலைத் தொட்டுவிடும் தருணத்தைக் கவிதையென்பேன்' என குறுவலையின் பிடிப்பறுத்துச் சொன்னது பழனிவேள்.

'சுசீலா திறந்து சொல்லாத சொல் வரம்பு கடந்த ரத்தவேட்கை மிகும் கவிதை. என் தலைமுறை ஜடாயு எலும்பால் மந்திரிக்கப்பட்ட சொல். புராதன இதயத்தின் பழந்தாகத்தை பிரம்மராஜனின் கவிதையிலிருந்து கிரேக்க புராணங்கள் வரை நீண்டு வர கவிதையின் நவீனத்திலும் இன்று பலர் திணை நிலங்களாகி குரல்வளையை உலர்த்தி தாகத்தில் அகப்பாடலின் பிரிவும் பிரிவு நிமித்தமாகத் தோன்றும் மணலின் துயரார்ந்த என்புகள்

கரையும் வெளியில்.... யாருமில்லாத இடத்தில் இருப்பின்மை தன் வால் மறுப்பெடுத்த சொற்களாகி அவை மூலம் வார்த்தையில் எதையும் வைக்காத வலியைக் கவிதையாக மாற்றினார்.

'கதநாய் திரிவுறும் பாலைகளில் செவ்வரக்கான குருதி காய்ந்துமிருக்க நீட்ஷேயின் மீஉருக் கத்தியால் கீறி புராணத்தின் நீர் குடிக்க எல்லா ராமாயணங்களையும் விட சுனை பதுங்கிய நீரோட்டம் பொங்கிஎழும் மின்னல் ஒளிர்கானகம் கம்பன்.' எனக் கருப்பு மரத்தின் பச்சைக் காகம் லஷ்மி மணிவண்ணன் கண்ணாடியில் கண் உரசிப் பேசியது கவிதை.

'கம்பனும் நகுலனாக மெலிவுக்கும் மெலிவான எளிமையில் தீவிரத தாகம் வேட்கை வேடனாகி வில்லின் அகராதி கணையுமிழ் சரங்கள் தப்பா சொல் எனவே சிபிபார்த்துக் காத்திருந்த மாடத்திலிருந்து சொன்னது யார்?

'செவ்வியல் தமிழ்க் கவிதைகளில் தமிழ்க் கலாச்சாரத்தின் முக்கிய குணாம்சத்தில் ஒன்றைக் காணலாம். தண்ணீர் தமிழ் வாழ்வின் நிலவியலில் திணைப் பிரிவுகளில் இலக்கிய மரபின் தவிர்க்க இயலாத குறியீடுகளில் ஒன்று. தமிழின் ஊழினை உப்பக்கம் தொகுத்திருக்கும் திருக்குறளின் முதல் அதிகாரம் கடவுளைத் தொழுகிற அகரம். உடன் திரும்பும் அடுத்த அதிகாரமோ வான் சிறப்பாகக் கொண்டாடி மழை தான் தொடங்குகிறது. நடந்தாய் வாழி காவேரியை இளங்கோ அடிகளுக்கு மேல் உயர்த்திய கலாந்த வேகம் கன்னட இலக்கியத்திலும் இல்லை என ஏ.கே. ராமானுஜனின் கன்னடம் நேர்மையாக இயல்கடந்த நியதியில் சாட்சியமாவது நமக்கு நீர்மை' எனத் தமிழவன் கலாப்ரியாவுடன் உரையாடும் வாசகத்தில் நாடு சூழ சூழ்ந்து கொள்கிறார்கள் மற்றவர்களும்.

'கார்லோஸ்... புராணத்தின் வெடிப்பெழுச்சியாகவும் சங்கப் பாடலின் நிலத்தோற்றங்களில் இயற்கை மாறாத இயல்பும் பட்டினப்பாலையில் பெருவிழாக்கள் கழிந்த அச்சந்தரும் மன்றத்தில் கூகைகளோடு அழுகுரலையுடைய ஆண்டலைப்புள் கூவி றெக்கை விரிக்க மடக்கு ஓலைகளாக புகார் நகர் வர்ணம் உதிர லிபிகள் தீராமல் வீழ்கிறகிரிப்டோ நூலகத்தை சிறகுகளாக மடித்து மடக்கி விரைகிறான் சம்பாதி. பௌத்தக்

தெய்வம் சம்பாபதி எனும் பெருங்கால் பறவையென சிலையடியில் தடமுள்ளது. சம்பாபதி பெரும்சிறகு அதனிலிருக்கும் மதுரைச் செழுங்கலை நியமத்து ஏடுகளும் நகர்கிறது. கழுகுலகை அரச கழுகாக சித்தரிக்காமல் அவதாரக் கருவியாக சித்தரிக்கப்பட்டதால் தானோ என கழுகரசனை மீளக் கேட்கிறார் எஸ்வியா 'ஏன் சம்பாதியை மூன்றில் தொடவில்லை நகுலன்?'.

நகுலனின் மௌனம்.

'மௌனியின் சுசீலா பிரபஞ்ச கானத்தில் வசப்பட்டு சேல்போலும் கண்களையுடைய 'மனக்கோட்டை' சிவந்து பழுத்த அந்திக் கருஞ்சிவப்பு வெளிர வௌவால் கோடு வரைந்த சுசீலாவின் கிறுக்கலில் நகுலனின் சுசீலா மோன வடிவம் சுடர்மறைப்பில் கஞ்சா சிமிழ் பற்றிய நீல இழைகள் மேலே ஆவியாய் வெண்மை கொண்டு பூசிய நர்த்தன சாயல்களில் கர்ப்பக்கிரஹ இருள்ஒளியின சுடர்மறைப்பில் யாளியின் அதியுருவ மோகம்.' என நாகார்ஜுனன் மௌனியைத் தூண்டுகிறார்.

'மௌனி அபினி சேவிப்பவர்' என நகுலன் பேட்டியில் வெளிப்படுத்த இன்மை இருப்புக்குள் தனிப் புலம்பல் பத்திரகிரியாரின் சித்தம் போலும் 'சிவனைச் சிவையாகி வா' வென்ற திருமூலர் வடிவத்தை சிறுகதையில் எடுத்ததாகப் பித்தனும் கீறிய வாக்கியம் அதிர்ந்தது.

'ஒரு அமீபாவின் நீலத்தில் உயிர் ததும்ப இவள் மணல் விழிகீறிய பீலிகளில் விரிகதிர் நாணச் சிவந்த பரப்பில் அடிவானம் மின்னி அறுபடக் கருநீலம் குடிகொண்ட சிருஷ்டியில் லயம் இரு சுசீலாவுக்கும் இசைவுபட்டு திரியில் படாமல் சுடர் தனித்து சோகம் படிந்த படபடப்பில் பணிகிறது படம் விரித்த நாதத்தில். எனவே மௌனி இசையிலும் நகுலன் மோனத்திலும் விட்டுச் சென்ற சுசீலா ஈருடல் உலோகப் படிமை.' இரு சுசீலாவின் மோனத்தில் சலனமாகிறார் சி. மோகன் ரகஸிய வேட்கையால். அனந்தபுரி நகரத்தின் உயருயர் டவர்களில் தொங்கும் உலக மயத்தின் கருஞ்சக்கரங்கள் சுற்றத் தொடங்கிய இக்காலையில் அலைவாயில் சேரரின் கருங்கப்பல் கருப்புத் தங்கமாம் குறுமிளகு பொதிகளுடன் மிளகுத் தேவதைகளும் சாஃப்ட்வேர் அடிமைகளாக மேற்கின் விசா முத்திரைகளுடன் பெருநகர்களுக்கு ஏகும் கிரீன் கார்டு போலிதர்களாக நாவாய்களில் மறையும் சாவு வேகத்திலே ஜன்னி வேகத்திலே மூணபெரியும் கடலின் பின்புலத்திலிருந்து கேட்பது உன் ஒலி-யாகத்தான் இருக்கும் சுசீலா.... தேக்கு மர நுண்மையும் அதன் கண்ணாடி மடக்குகளால் இலைகள் உதிர்வது போல் அசைவு கொண்ட மரப்பேழையிலிருந்து எழுந்திரு... கடந்த நூற்றாண்டுகளின் புகழ் கீர்த்தி அற்புத வைலட் மகார்ச்சி, வாடாமல்லி, பழுப்பில் வெள்ளை உதிராப் பூ, கருஞ்சிவந்த நாவற்கனிகளும் வீழ உனது சுரியல் அலை நீ இறந்த பின்னும் பெட்டகத்தில் பொங்கிப் பரவும் விம்மலைக் கேட்கிறேன். புளோரிடா மாகாணத்திலிருந்து நாளிரு இருட்டுடன் விமானம் இறங்கி சோதரன் குமாரன் பார்க்க வருவதற்காக 2007 மே 17 இரவு மார்ச்சுவரிக்கு மரணப் பூட்டில் வைத்துத் திரும்பிய பனி அறை அமரர்களும் காத்திருந்த சிற்பங்களுக்கு நடுவில் நகுலன்.

பனிச்சிதிலங்களாய் உன் சிலையுருக அருங்கலையாகிருதி வரைபடத்தில் உள்ள மொழி அணுக்களின் மாறாத இடைவெளியில் நினைத்த புனைவினது சம்யமம் நாடி அடங்கியிருந்தது. பதனச் சயனத்தின் மறைதிறவில் கண்மூடிப் புதைந்திருக்கிறாய் உனது அனாதைமை அறிவித்த ஒவ்வொரு கணத்தையும் எட்டாகப் பகுத்துப்பார். ஒவ்வொரு கணமும் காத்திருத்தல் கழுமரம் தான் கலைஞனுக்கு.

இந்தப் பனிப்பூட்டை நான் நெருங்குகிறேன். சவப்பேழை இருள் நம்பர் மறையக் கட்டுக்கதையின் நனவிலியின் ஜ்வாலையிலிருந்து உன் புராணம் ஒளிகொண்டு விழி திறநகுலமே!

சுசீலா ஒரு கணம் உயிர்க்கிறாள். தெறிக்கும் நீர் திவலைகளின் ஒலிகேட்டு உறங்கும் சிறுபெண். நீர்த்துளிகளின் திரள் திரள்களாய் ஈரமான உடல் பனிச்செதில்களாய முளைத்த சாவின் குளிரிலும் அசேதனத்தின் மாயப்பரப்பில் உலவுகிறாய்.... பனியின் வசியத்தில் சிலையான பேரழகின் வீழ்ச்சியில் நகுலனின் அநித்ய ஸ்திதியானது இருப்பின் உச்ச பட்ச பிரயத்தனத்தின் விளைவாகப் பெருகும் எதிர் பொருள் கொள்ள வேண்டி தோல்வியைத் தணித்துக் கொள்ள முடியாத நெடுந்தொலைவுக்கு உயிர் தூண்டும் க்ரியா சக்தியில் பீடித்திருக்கும் கவிதை முடிவற்றமாபெரும் சிறகுகள். பெருவெளியின் சூறையை சிறகுகளில் தாங்கி மண்ணில் மோதி வீழ்கிறாய்.

என்ன கேட்கிறாய்... சுசீலா.... ஒரு மிடறு நகுலன் அரக்க மது பருகு... ராவண சோகத்தால் அசுரர்கள் யாம் கர்வமுற்றோம். தனி மொழி, இல்லாமல் இருப்பது, எல்லைகள், மழை, மரம், காற்று, கோட் ஸ்டாண்ட் கவிதைகள், சவரி, குகன் புராணத்தில பாழ்வெறுமை நோக்கி.

இப்படி குறையில்லாமல் பூரணபக்கம் நின்று தர்க்கம் பண்ணுகிற இவள் சண்டையிடுவதை, விழிகள் கிறங்கி எழுத்தெழுதி நித்திரையின்றித் திரிந்த 'நினைவுப்பாதை'. தீவாந்திரத்தின் அடிவானில் அசையும் சலனங்களைக் குறித்து அந்திமப் பரிதி பிளந்து தன் சிறகுகளை சூரிய கிரணங்கள் தகித்ததில் ஒவ்வொன்றாய் உதிரத் தொடங்கியதில் பிராய காலக் களைப்பினால் விழிகளின் கருமை படிந்த பைத்திய வெறிப்பு. வானத்துக்கும் நிலத்துக்கும் ஜடாயு றெக்கை மடித்த நகுலனும் நாடோடி தான். 'சம்பாதி கதையை ஏன் பற்றவில்லை நீங்கள்' என மறுபடியும் பா. வெ. கேட்டதும் 'ஓ, நீலவீதியில் சுழலும் விண்ணூஞ்சல் பெண்ணொருத்தி சிறகு படைத்தவள் இல்லையா... பா. வெ. சரிசரி சம்பாதி கதைக்கு வருகிறேன். ஜனங்களின் மனதை கொள்ளையிட்டவன் சம்பாதி. ஒரு கழுகரசன். மூத்த சகோதரன். அவனும் இல்லை'.

உலகை ஆக்கிரகித்த மார்க்வெஸ்ஸின் 'மிகப் பெரும் சிறகுடன் வயோதிகன் மண்ணில் முகம் பதிய படுத்துக் கிடந்தவனால் ஸ்பரிசம் பெற்ற கருப்பு கடவுளர் வெள்ளை எஜமானர்களை விட்டு

இங்கிலாந்தை விசுவாசித்த கொள்ளை நோயிலிருந்து உரைநடை அற்புத யதார்த்தத்திற்கு மாற்றிப் பின்னிய 'மீட்சி' தொகுப்பிலிருந்து 'படிகளில்' தலைகீழாக

இறங்கிய போர்ஹேயின் புதிர்ப்பாதைகளை எண்பதுகளில் சிற்றிதழ் வீச்சில் புதிய பரிமாணத்தை அடைந்தது. எண்பதுகளில் சிறுகதைகளின் பாய்ச்சலைப் பெற்றது. தொண்ணூறுகள் நவீன கவிதை நிலம் பிளந்தெழுந்ததில் 70களின் மூன்றாம் தலைமுறை நவீனப்படுத்திய வலி–மை எனவே' எனகார்லோஸ் நகுலனை அணுகி மேலும் கேட்கிறார்.

'கார்லோஸ்... பாவைகளின் சாய நிழல் வீசிய சோகத்தில் என் மனம் சதா பற்றிக் கொண்ட கேலிச்சித்திரங்களை ஜடாயுவின் உரையாடலில் காணலாம். 'மூன்றும் ஐந்தும்' எதிர்காலக் காமிக்ஸ் கவிதைகளாக புராணத்தை மாற்றி எழுதிவிடும். எழுதப்பட்ட பின் நாடி ஏடு போல அட்சரம் வேறாகி விடும் புராணத்தை ஜகத் சித்திரமாக பாரதியென சோகநாடகத்தை ஷேக்ஸ்பியரிலிருந்து எடுத்தேன். பப்பட் மூவ்மெண்ட்டுக்கானதை டென்னஸ்ஸி வில்லியம்ஸின் கண்ணாடிச் சிற்பங்களை பொம்மலாட்ட மரபுடன் இணைத்து கம்பராமாயணம் ஆடல் பற்று தமிழில் தான் மலையாளிகள் நடத்துவதை தாத்தாவுடன் சென்று பார்த்த ஞாபகம். இதைத்தான் கே. எல். கிருஷ்ணன் குட்டிப் புலவர் ஆடல் பற்றைத் கைமூலம் தமிழில் எழுதிச் சென்றார். அந்த கந்தல பாவைகளின் சாயம் அழிந்து சிதல் அரித்த தோல்பாவை நிழல் நீண்டு ஐம்பத்தைந்து வருடங்களுக்குப் பின் கவிதைகளாய் என் மனப்பித்தில் ஆடுகின்றன. யானைக்காதுகள் அசையும் அரண்மனை முற்றத்தில் கால விளக்கடியில் வந்தான் ஜிவ்வென்று ரெக்கை சாயமழிந்த ஜடாயு.'

'அப்படி நுழைந்த இரு பெரும் புராணப் பறவைகள் துரைசாமி என்ற சிறுவனை தூக்கிப் பறந்த வேகத்தில உச்சி... உச்சி... பினனோடும் அண்டங்களைக் கணக்கெடுக்க முடியாது' நையாண்டி செய்கிறார் ந. முத்துச்சாமி. 'மார்க்வெஸ் தமிழ் பரப்பில் இறங்கி சிறகுகளை உலர்த்திக் கொண்டிருக்கிறார் எனவே'. சொல்லி மறைகிறான் வாசகன். ●

சுசீலா ஆங்காங்கே கிறுக்கி வைத்த 2007, மே 17-இ

என்னை போன்ற வாசக சற்பாத்திரரே....

இன்று பேரூர்கடா சாந்தவனம் ஆஸ்பத்திரி பிரசவவார்டில் 8 நிமிடங்கள் கழித்து இரவு 10.38க்கு நகுலன் பிறந்தார். தாயின் ஜனனம் இது.

அயோனி	அங்கு
1. ' என்னைப் (சொல் அற்ற நான்) பெற்றது (மீன்)	2. எப்பொழுதும் அங்குதான் இருப்பேன்.
(நான்) சொல் அற்றதான் தான்' (மீன் எலும்பு) (பாழ்)	இப்பொழுதும் அங்குதான் இருக்கிறீர்களா?

புராதனப்பண்பாட்டு கிரேக்க இந்தியப் புராணீகத்தில் மீன் வளர்ப்பு நீர்வாவியில் தனிஉரிமை எல்லையாக 'நிலவு' சிருஷ்டிகரத்தின் 'உவாந்தமாக' ஜீவார்த்தம் கொள்வது மரணமும் வாழ்வும்தான். எனவே நிலவு சொர்க்கத்திலிருந்து விடுபட்டு மறைந்து வரும் மூன்று நாட்களும் உவாந்தமாக மறுபிறப்பு கொள்கிறது. நான்காவது நாளில் மறைவுநிலை. நான்காம்நாள் படைப்பு நிலையின் உயிர்ப்படக்கம். ஆகவே நகுலன் இறந்தார். 48 மணி நேரம் (இருநாட்கள்) அடைந்துள்ள உவாந்தம் தான் சுசீலாவும் அவள்தனில் மறுபிறப்பு கொள்ளும் நகுலனும். சுசீலா எப்போதும் தனியானவளாக இருக்கிறாள். அவள் ஒரு கவிதை எனில், அவளுக்குத் தனிமை தேவைப்படுகிறது. ஒரே சமயத்தில் அவள் இரு சுசீலா. மூதாய் அல்லது சிறுமி.

அ. எவ்வொரு மனிதனும் அவனளவில் தன் கல்லறைக்குள் தனியாகவே நடந்து செல்கிறான்.

ஆ. வரையப்பட்ட சமுத்திரத்தில் வரையப்பட்டுள்ள கப்பலில் சோம்பியிருந்த மாலுமிகளின் நினைவகராதிகள் நிலம் மீது நாடோடிகளின் பாதங்களில் நகர்கின்றன, கப்பலிலிருந்த தடங்கள் மறையாமல்.

இ. கடுவேதனை தருகிற அலைத் தவழ்வில் நுரை....

ஈ. இடையே நின்றோய்வதற்கு. முடிவை நோக்கிச் செல்வதற்கு மேருகேற்றிக் கொள்ளாமல் துருவேறுவதற்கு. உபயோகத்தில் ஒளிராமலிருப்பதற்கு வாழ்வில் சுவாசித்திருந்தாற்போன்றே மந்தகதியடைவது எப்படி?

உ. நான் வீணிற் கழித்த என் ஆன்மாவை அழைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஊ. அப்படியானால் எல்லையுடையதால் வரும்பின்மையை எப்படிக் கிரஹித்தவளாவ முடியும்? குருட்டுக் கிறுக்கல் கிறங்கிய தொலைவுகளில்.

எ. மடிமை வாய்ந்தவர் நின்றிருப்பதைப் போன்றே நகரக்கூடிய இருமுள் கைகளையுடைய கைக்கடிகாரம்.

ஏ. மாலை நேரங்களில் நாம் அவரைச் சந்திக்கலாம். இழந்தும் விடலாம் என்பதாக வெற்றிட நாற்காலியின் எதிர்பாராத கவிதை வீற்றிருக்கிறார் நகுலன்.

ஐ. ஒரு வீடு முழுவதையும் நிரப்பக்கூடிய ஒரு வயோதிகரின் தனிமைதான் பிரபஞ்சம்.

ஒ. வலிமை முதிர்ந்த வயோதிகர் தலைவடிவம் தாமிர அழகு ததும்புவது.

ஓ. எனது நாட்கள் மஞ்சள் இலையிலிருந்து மலர்களும் கனிகளும் வீழ்ந்து கடந்துவிட்டன. புழுவும் உள்ளழிவும் துயரமும் தான் தனித்திருக்கிறது என்னிடம

ஔ. நகுலன் கவிதை வாழ்வின் வித்யாப்பியமும் சாஸ்வதமும் நாங்கள் அடைவது எப்போது? முதல் மழைப்பெயலும் காற்றின் துடியதிர்வும் நகுலனுக்குப் பிறகான கவிதையில் மீண்டும் நிகழ்வது எப்போது?

ஃ. அந்த முது கிழவரின் பிரயோஜனமின்மையை அவரது கோட்டின் கைத்தாங்கல காலக் கிழிசல் கீற்றுகள் பாடிக்கொண்டிருக்கின்றன.

<u>சேதன அசேதன சம்வாதம்: ஈ</u>

1. இயற்கையின் கருப்பை ஒருவேளை நகுலன் கல்லறையாக இருக்கலாம்' கூட்டமாய்ச் சொல தனித்தனியே பிரிந்து மறைகின்றன சிற்றிதழ்கள்.

2. நகுலன் விட்டுச் சென்ற க்ளப்ஷிட்ரா நீர்க்கடிகாரம் நிலைப்பேழைத்தட்டில் வைக்க முடியாத அளவிற்கு மிகப் பெரியதாக இருப்பதால் கடந்த 86 வருடங்களாக தரையிலேயே நிறுத்தப்பட்டிருந்தது.

3. டிக்...க்ளப்... டிக்... க்ளப்... நகுலன் இருக்கிறாரா?... இல்லை போயிருக்கிறார் வேறு தன் மற்ற நீர்க்கடிகார மரநிழல்களைத் தேடி.... டிக்... க்ளப்... டிக்.... க்ளப்... பிரிவு கொள்வதே நீர்த்துளியின் இயல்பு.

4. கடிகாரம் இரண்டு முறை கரைந்தொலிக்கும் முன்பாக நீ என்னை மூன்று முறை மறுதலிக்கிறாய். பாலை அலைதலில் நகுலன்.

5. பழங்கடிகாரம் தன் முள்மறைவிலிருந்து சொன்னது: நகுலனின் கொக்கரக்கோவை கேட்கத்தான் சூரியன் விழிந்து வருகிறதென எண்ணிக் கூவ மறுக்கின்றன சேவல்கள்.'

6. நகுலனற்ற வீட்டுக்குள்ளிருந்து நகுலனின் குரல்: நான் ஊதா நிறப்பசுவை ஒரு போதும் கண்டதில்லை. காண்பேன் என்ற நம்பிக்கையுமில்லை. ஆனால் அவ்வித ஒன்றைவிடவும் விரும்பித் தேரத்தக்கதை கண்டிருந்தேன் நான். வீட்டின்

வரவேற்பறையாக பூனை இருக்கிறது. எட்டாம் பிறைவடிவ ஏரியாக நாய் இருக்கிறது பிக்காஸோவின் காளையுருவ மினோடார் சூரல் நாற்காலியாக இருக்கிறது. இதனால் ஒவ்வாமையென என்னதான் ஏற்படவியலும்?

7. உள்ளே சமையலறையில் சுசீலாவுடன் சம்பாஷணை: மாறாத்தன்மை கொண்டவள் நீ. ஆனால் இன்னமும் பெண்ணாகத் தானிருக்கிறாய்.'

8. கருப்பு மரபீரோவில் ஜான்மில்டனின் புத்தகம் தானே திறந்து பேசியது: சாம்பல்நிற மிதியடியுடன் விடியற்காலம் நிலைமாறாமல் கடந்துவிட்டபோது.....'

9. எதிர்த்த கண்ணாடி பீரோ கீறல்வழி 'வேஸ்ட்லேண்டில்' மிகப்பலவற்றைச் செய்யாது விட்ட மரணத்தைப் பற்றி நான் எண்ணியிருக்கவில்லை.

10. மரணமடைந்த பின்பு நான் நகுலனின் பூமி முழுமைக்குள்ளாக சென்று கொண்டிருக்கிறேன்'.

9. ' பேரடைஸ் லாஸ்ட்' காகிதத்திலிருந்து உடனே எந்தக் கலையில் வெறுக்கத்தக்க உருவம் பெறுவாய் நீ?

8. இருட்டறையில் நடமாடும் நரகத்தின் பழமொழிகள் படிம ஏடு. திறந்து வந்த வில்லியம் ப்ளேக்குக்கு நகுலனை கைநீட்டுத் தொட நெருங்கி. மிகைந்த துயருழலும் சிரிப்பு. மிகைந்த மகிழ்வூடும் அழுகை' .

7. வா நிழல்களைப் போல. விட்டு நீங்கு எனவே' என்றார் நகுலன்.

6. அந்த மஞ்சள் பூனைக்கும் பொய்யிற்கும் இடையேயான வித்யாசங்களில் மிகவும் வியப்பு மலைப்பதிர்ச்சி தருகிற ஒன்று யாதெனில், பூனைக்கு ஒன்பது உயிர்கள் மட்டுமே இருக்கின்றன. எஞ்சியுள்ள நகுலனின் மீதி எட்டு மூன்று ஐந்து ஆகவே கவிதைகள்.

5. மரணிப்பது வாழ்வு தவிர வேறில்லை; வாழ்வு என்ற அழைப்பது மரணம் தவிர வேறில்லை ' எனக் கூறிக்கொண்டே நவீனன்....

4. வாழ்வு வெற்றுக் கனவுதான் எனச் சொல்லாதீர்கள் இறந்துவிட்டதாக எண்ணப்படும் ஆன்மா உண்மையில் அயர்ந்த உறக்கத்தில் உள்ளது?

3. பூனைகளும் குரங்குகளும் மற்றும் குரங்குகளும் பூனைகளும் ...... இங்கே எல்லா மனிதவாழ்வும் இயங்குகிறது' என வாலாட்டாமல் சொன்னது நகுலனின் அச்சுதன் நாய் சும்மாயிருக்க மாட்டாமல்.

2. ' மனிதன் ஓர் வீண் அற்புதம்' என்று எழுந்தார் நகுலன்.

1. பீரோவின் பக்கம் வந்த நகுலனை எடுக்கச் சொல்லிப் பேசியது புரோமிதியஸ் அன்பவுண்டு புத்தகத்தின் ஆவி: வாழ்வதை பிரக்ஞையுடன் வாழ்வென்று

அழைப்பவர்களை மரணம் முகத்திரையாக மூடியுள்ளது. அவர்கள் உறங்கும் போது திரை விலக்கப்படுகிறது'

2. ஷெல்லியின் நூலுக்கு அருகில் பதுங்கியிருந்த ஜுலியஸ் சீஸர் ஷேக்ஸ்பியரின் கருப்பு கோட்டினை அலட்சியமாய் விலக்கி வந்து சாயைகள் நடமாடும் நகுலனின் வீட்டுக்குள்ளே தலைநீட்டுகிறான்.

இன்னும் எத்தனை யுகங்களுக்கு இதனின்று
நமது மிக மேன்மையான காட்சி
பிறப்பற்ற ஸ்திதிகளிலும்
இதுவரை அறியப்படாதவற்றை வலியுறுத்தியும்
நடிப்பாற்றப் பெறவிருக்கிறது?'

3. என்றாலும் மறக்கப்பட்டிருப்பதை விடவும் புதிதாக ஒன்றுமில்லை' என உறங்கச் சென்றுவிட்டார் நகுலன்.

4. ஸ்டாண்டில் தொங்கும் ஷேக்ஸ்பியர்கோட் முனகியது, எனது வெட்கங்களுக்கு எதிரே மெழுகு சுடரை ஏந்தியே தீர வேண்டுமா?

5. 'நாடக ஒத்திகையிலிருந்த நடிகையின் 12ஆம் இரவு ஒளிக்கற்றை மீது முகம் திருப்பி வாக்கியங்களை ஒப்பிக்கிறது'.

பெருந்தகை வீரனின் எலும்புகள் தூசுகளாலானது. அவனது நல்ல வாள் துருப்பிடித்துக் கேடுற்றது. எனினும் நான் நம்புகிறேன். அவனது ஆன்மா துறவிகளுடன் தானிருக்கிறது'.

6. லவ்ஸ் லேபர்ஸ் லாஸ்டில் சாயையொன்று கடந்தவாறு எப்போதும் மே மாதம் தான் காலப்பருவமாகும் காதல்'

7. 'அன்று சுசீலாவும் காணாமல் போகிறாள் மே 17 இரவு. மே மாதத்தின் அருமையான மொட்டுகளை ஏற்றத்தாழ்வாக வீசும் கடுங்காற்று பிடித்து உலுக்கி உதறித் தள்ளி விடுகிறது' என சோனெட்ஸ் கடக்கிறது கருப்பு கோட் மூடிய புத்தகத்தில்.

8. எமிலி டிக்கின்சன் நான். ஒருவரும் இல்லாதவன். நீ யார்? நீயும் ஒருவரும் இலாதவனா? அப்படியானால் நாம் ஒத்த இணை. ஒருவரிடமும் இதைச் சொல்லாதே. அவர்கள் நம்மை நாடுகடத்திவிட்டார்கள் என்று உனக்குத் தெரியும் தானே சுசீலா' என்றார் நகுலன்.

9. மே இரவு 17 இரவு 10.30ல் இறந்து 5 நிமிடங்களுக்குப்பின் மார்ச்சுரியில் தொடர்கிற சயனவாழ்வின் 48 மணித்தியாலங்களில் முள்பிசகாத கவிதையின் சிருஷ்டிகணம் காலமற்றிருந்தது. வெப்பச்சலனத்தில் உருகும் பனிக்கட்டி போன்ற கவிதை. அதன் சொந்த ஓட்டத்தில் உருகிக் கரைவதாகவே இருந்து தீர வேண்டும்.

10. நகுலனிடம் உறைந்த மில்டன் முகத்தில் 'கவிதையின் உறுதியான தியானம், நன்றியற்ற கலை தெய்வம்'

9. கவிதை எப்போதும் புதிராகத்தான் இருக்க வேண்டும்' என்றவன் யாரோ.

8. கவிதையில் தொடக்கம் கொள்வதற்கு அரும்பாடானதாக ஒன்றுமில்லை, அதுவே ஒருவேளை முடிவாக இல்லாத போது' ... அஸ்தமனப் பனிச்செதிலாக உடையும் நகுலன் குரல்.

7. 'சொல்லில் பாதி அவன் பேசுவது, பாதி அவன் கேட்பது' என சுசீலா எட்டித் தொடுகிறாள் உருகும் பனிக்குரலை.

6. சுசீலா... பிரிந்துவிடுவோம். நமது சமவெளிகள் தொலைந்துபோன நதிக்கரையில் மறதி கொண்டு மரணம் அமர்ந்திருக்கிறது... நேற்றுதான் நாம், எனவே ஒன்றையும் அறிந்திருப்பதில்லை, ஏனெனில் பூமி மீது நம் நாட்கள் நிழல் தாம்'.

5. அவள் இரவை விட்டோடி அவளது வெற்றிட நிலாக்கோளத்தினிடைக் குகையில் தன்னை மறைத்துக் கொண்டபோது 'நிலவின் மௌனமார்ந்து சூரியன் எனக்கு இருளாகப் பிரசன்னமானது' என்கிறாள்.

4. லூயிகரோலின் த்ரூ த லுக்கிங் க்ளாஸ்' உப்பக்கம் திரும்பிப் பாடிக் கொண்டது: பரந்தகன்ற வாழ்வும் இருமடங்கு இயற்கையும் அளாவுவதாக.....

கேளும் நகுலனே... எலும்புகளும் தொலைவுகளும் எல்லா மனிதர்களும் தீவுகள் தாம்.

'பெறுமுறைமரபின் அறிவுவரக்காட்டி
ஆங்குவா முயிர்கள் அவ்வுயிரிடங்களும்
பாங்குறமண்ணீட்டிற் பண்பறவகுத்து
மிக்கமயனால் இழைக்கப்பட்ட
சக்கரவாளக் கோட்டமீங் கிதுதான்' (மணிமேகலை)

ஏடுதவறாமல் எழுத்தாணி சாயாமல் 'அந்த மஞ்சள் நிறப் பூனையிடம் கேட்டு எழுதி வரும் இந்த நூல் சுவடிகளை சக்கரவாளக் கோட்டத்து ஆண்டலைப் பறவை நான் வலப்புற இறகு பறித்து ரஸவாத மூலிகை மை தொட்டு எழுதிவரக் கேட்டு வாரும்! ' ஆழத்துயில் புணர்ந்த ஜடாயுவும் / உள்ளந் துணுக்குற / துயில் நீத்து / காலம் இடம் மறந்து / தன் முன்னர் ... கானகத்தில் ஒரு அதிசயங் / கண்டான்:

ஒரு கணம் இயங்கும் காற்று
தன்னியக்கந் தவிர்த்து நிற்க
பறவைகள் ஒலி அடங்க
பாம்புகள் படம் தாழ்த்தி ஒடுங்க
இலைகள் அசைவின்றித் தாழ்ந்து நிற்க
காட்டில் நிசப்தம் சூழ
கொடிகள் வெறுங்கோடுகளாகக் காண
மெல்லென எங்கும் இருள் பரவ...
தசமுகன் மிதிலைப் பொன்னைப் பற்றி எடுத்துத்
தன் தேர்மிசை எடுத்து ஏக நிற்பது கண்டு
ஜடாயு ' ஜிவ்...' வென்று அவ்விடம் ஏக
அரக்கனும் பறவையும்
அமர்புரிந்தால் வருவதென்ன?...
'எங் கெடா போவது எங்கே நில்... நில்'
என்று சொல்லி
அவன் அமர் தொடங்க
கானகம் முழுவதும் அவன் செய்த
சண்டையின் சப்தம் கேட்க;
படபடவென்று
தன் இறக்கைகளை அடித்து
தன் அலகினால் அவனைக் கொத்தி...
கவசத்தை அறுத்து
தன் பெருஞ்சிறகுகளால்

அவன் செல்லும் திசையனைத்தும் மறைக்க...
ஒரு பறவை போல்
சிறகடித்து தத்தளித்து

ககனத்தில் வட்டமிட்டு என்ன? 'என்றாலும் நகுலனின் ஜடாயு இங்குவந்து வளர்சடை இருள் விரித்த சம்பாதி கீழ் முதுகு விரித்து காட்டாணி விரல் எழுத்தாணியாய் எழுத்தோ சர்ப்பமாய் சடைமுடிவிலா கானகமாய் அலைபடும் ஆழிவளர் சடை குமரா பட்டினத்து கோடு முடி சுழிந்த புகார் அண்டையில் சம்பாதிவனம் கோரவல்லூறு வாய் திறக்க விரிந்தது சக்கரவாளக் கோட்டம். பௌத்த சம்பாபதி பெண் பறவை ஏட்டெடுக்க இருந்த கவிதை ஏடுகள் நுரைபொங்கி வர நகுலனை இழுத்த சர்ப்ப அலைகளால் விழுங்கப்பட்டு திரும்ப வெளிப்பட்டான் சர்ப்பவாய் திறந்து. ஞாபகங்களில் ஊர்ந்து வரும் ஏடுகளின் நிழல் கோடு சாயைகளா? வாக்கு மூலம் நாவலிலிருந்து நகுலன்:

92. எங்குமிருக்கும்
நீ
எங்குமில்லாத என்னை
நீ
ஏன் இன்னும்
தேடிக் கொண்டிருக்கிறாய்?

(சோதரன் குமாரன் பிரசாந்த் நகுலன் 19 மே 2007 காலை 10.35ல் உடல் அருகில் இருந்த என்னோடு வாக்குமூலத்திலிருந்து 92ஐ திரும்பத் திரும்பச் சொல்லி அழுததை தேற்றமுடியவில்லை) இந்தப் பாடலின் பொருள் என்ன? ஆண்டலை : சரிசரி நகுலனே... எங்குமானது மனித இனம் மற்ற எவ்வுயிர்களின் இடங்களையும் சுயஉருவைப் பெருக்கி அடைத்துக் கொண்ட ஆதிக்கம். ஓரறிவுயிர்க்கும் ஈரறிவுயிர்க்கும் மூவறிவுயிர்க்கும்.... கால வெளியையும் மூடுகிறான் வீங்கிப் பெருத்த பிணமாய். சாதாரணப் பூச்சிகளும் பறவைகளும் அற்று விட விண்ணையும் கோடுகளால் தகர்த்ததில் குருவிகள் தற்கொலைக்கு முயல்வதாக செய்தி வேகத்தில் சொல்லி மறைகிறாய். நீட்ஷே சொன்னதும் சரிதான் கடவுளின் மரணத்தை கடவுள் தவிர்த்து ஒலிக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் இன்னமும் நாம் இலக்கணத்தை நம்புவதுதான் என்று நான் கவலை கொள்கிறேன் என நீட்ஷே சந்தேகித்த பின்....

'ஏன் இன்னும்
தேடிக்கொண்டிருக்கிறாய்?'

கயிற்றரவு (புதுமைப்பித்தன்) சுற்றப்பட்ட குயில்கோட் (பாரதி) நகுலன் கோட்ஸ்டாண்டில் தொடங்கி அசைகிறது.

மனமாயை மாயை இம்மாயை மயக்க

மனமாயை தான் மாய் மற்றொன்றுமில்லை'
மணிமேகலையில் வரும் நரிமகன் அல்லனோ கேசகம்பளன் காலம் கந்தலாகிப்பிதிர நிறம் வெளுக்காத கருப்பு ஆட்டு நோமக்கம்பளி போர்த்திய ரஸவாதி.
ஒரு கட்டுவெத்திலை
பாக்கு சுண்ணாம்பு புகையிலை
வாய்கழுவநீர்
ஃபிளாஸ்க் நிறைய ஐஸ்
ஒரு புட்டி பிராந்தி
வத்திப் பெட்டி சிகரெட்
சாம்பல் தட்டு'

நகுலன் பித்தளைப் பெட்டிக்குள் வெற்றிலைச் சீத இராமபாணப்பூச்சி நகுலனைக் குடையும் இரவு. மாரீஸமான் ஓடப்பின்கால்கள் நீளமாய் வளரும் டாயின் ஓவியமென வெற்றிலைச் சுசீலா, சுண்ணாம்புப் பிரயோகம் அதிகமானால் பித்தனுக்கு ஞானக்குகை சிறுகதையில் வரும் வாலைக் கன்னியின் மோனம் மறுகணம் உயிர் குடிக்கும் வெறியும் குழந்தமையாய் மாறிவிடும். நகுலனுக்கு கற்பிதயாக்கையில் சுசீலா.

ராமபாணப்பூச்சி குடைந்ததில் தங்கையும் திரிசடையானாள். புராணத்தின் சாயைக்கள் பாழ்வெற்றாகக் குடித்ததில் விபீடணன் தனிமொழிக்குவந்தேன். காலரா சுற்றிக் கொண்ட திண்டுக்கல் பக்கத்தூரைவிட்டு ஜனங்கள் காலி செய்து ஓடிவிட நெசவாளர்கள் காலநாராமாயணம் பாடிப் பாராயணம் சொல்லத் திரும்பி வந்த தனி அறையில் அமர்ந்ததும் நடந்துவர ஒன்றுக்கும் மேற்பட்ட ராமாயணங்கள் சொல்முறையில் 25க்கும் மேற்பட்டு இருக்கிறது. தெற்கிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் 300க்கும் மேற்பட்ட ராமாயணங்கள் இருப்பதை காமினிபொல்க்கும் ஏ.கே.ராமானுஜனும் (அட்சரம்) முன்மொழிந்ததால் பரிதியும் திங்களும் கலந்து பிரித்த ஐந்து தனிமங்களை ரஸவாதத்தில் தன்வனத்தானே சிருஷ்டித்துக் கொண்ட சபதம் பாஞ்சா என்றால் நகுலராமாயணம் மூன்றும் ஐந்தும் ஐகத் சித்திரம். சாயைகள் பற்றி? வார்த்தை வார்த்தை வார்த்தைகள்?. சுசீலாவே வார்த்தையாய் இருக்கும்போது போர்ஹேயின் அலேப்' இரவில் சொன்ன அரேபியக்கதையில் ஓர் ஒற்றை நாடிப் பெண் ஹெஸாரின் ஓவியம்போல் உரிக்கப்பட்ட தோல் நார்களால் சுற்றப்பட்ட சித்திர எழுத்து முகம். நகுல ராமாயணத்தில் 'அசோகவனத்தில மாதவிடாயத் துணிகள் எரிந்தன' (பிரான்ஸிஸ் கிருபா) (உறங்கி விழ்ந்த கும்ப கர்ணன் சொல்வான் அண்ணாலே நீ இன்னும் உறங்குக்றாய்)

கட்டை படுத்துறங்க
இறுகப் பிணித்த பாசமும்
கட்டுவிட்டு தளருமந்நேரம்.
என்னையறியாது நான்
உள்நோட்டம் பயிலுங்கால்
தன் நோக்கம் பின்னின்றிழுக்க
நான் உறங்கி விழித்தாலும்

அண்ணாலே! என்ன பயன்? விபீடணன் கும்பகர்ணன் சம்வாதத்தில் வருவது உன் உலகம்வேறு என் உலகம் வேறு எல்லாவற்றிற்கும் காரணம் கண்டுபிடிக்கிறீர்கள். பிரம்மாணங்களை நிறுவுகிறீர்கள். காலம் இடம் என்பவை கூட வெளிமயக்கம் என்கிறீர்கள். இதற்கெல்லாம் நீங்கள் உரைகல்லாக வைத்திருப்பதும் இந்த புனைகளால பின்னப்பட்ட உலகம் தான். அடிப்படையில் நான் ஒரு அரக்கன். நிழல்கள் எனக்குத் தேவையில்லை. ஸ்தூலத்தை சூக்குமமாக்கும் விந்தையை நாங்கள் வெறுக்கிறோம். உங்கள் கவிஞர்கள் மெலிந்த வார்த்தைகளின் பின் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அரக்கர்கள். ரத்தமும் சதையுமாகத்தான் நாங்கள் இந்த உலகை தரிசிக்கிறோம் ஸ்பரிசிக்கிறோம். சுவைக்கிறோம். உணருகிறோம். நீண்ட கவிதையில் பிசாசுகள் நடமாடும் நிர்ஜனமான தெருக்கள் நிழலாடுகின்றன' எனவே தான் சனாதனத்தை இடறி

வீழ்த்தி நான் நானாக நானூறு விதம் என்கிறார் நகுலன்.

எவ்வளவு பெரியவில் உள்ளே / வந்தால் வீடு / உடைந்து விடும் தானே / வளைந்திருக்கும் / வானவில்லுக்குள்ளே / இருக்கிறது என் ஊர் 'ராமபாணப்பூச்சிகள் குடைந்த வானவில் புஸ்தகத்தை தேவதச்சனிடமிருந்து எடுத்துச் செல்ல புராணவசியத்தில் கரைத்து சோளக் கதிருக்குள் வளைந்திருக்கும் மண்ணாலானவில். ஜன்னலெங்கே... ஜன்னலெங்கே... வீதி பார்த்துக் காத்திருந்த மாடமெங்கே' சரித்திர நிகழ்களும் தொன்மையும் புறாவின் கும்பகாரத்தோடு அதியதிர்வு கொண்ட சிறகு.

குரங்குப் படைகளும் சீதையும் லட்சுமணனும்
இல்லாமல்
தகரவில்லோடு
ராமன் வேஷமிட்ட குழந்தையைப்
பார்த்தேன் ஒருநாள்
கடைத்தெருவில்'

....
அதேவழியில் அடுத்த நாள்
சீதை வேஷமும்
அனுமானும் எதிரே
மட்கிய பாவாடை கமகமத்தவளிடம்
ராமன் எங்கே என்றேன்? கடைத்தெருவில் சீதை மறைகிறாள்.
ராவணக் குழந்தையை இன்று வரை பார்க்காமல் (இக்கடல் இச்சுவை)
கங்கையாற்றின் புராணீகத்தை உள்கரைத்திருக்கும் டி.எஸ். எலியட்டின் பாழ்நிலம், பிரம்மராஜனின் 'நர்மதையின் வேர்வைப் படகுகள் மறைந்துவிடும்' மறைவும் தேவதச்சனின் லோயா மலர் ஒன்றும் கற்பித வெளிக்கு வருகிறது. வெவ்வேறு பறவையாகாமலும் க்யெக்' பறவை அலகால் கீறிய அல்லா தொன்மம். காலத்தின் சிலைகள் வீழ்த்து ஓடி வரலாயிற்றுகல் 'நீ விரும்புவதுன் உடல் முழுவதும் ஆகுக' (இந்திரவதம்)
புல்லில் உருகி வரும் மெழுகொன்று
காலை ஜில்லிட்டு நனைக்கவும்
உதறிக்குதித்து
அட நத்தை' என்றேன்
மறுகணம்
உயிரைக் கல்லாக்கிய மடராமனாகி
ஒரு காலைச் சொறிந்து நின்றேன்' எஸ்.வைத்தீஸ்வரனைத் தொடர்ந்து ஞானக்கூத்தனின் ராவணன் விழிகளும் நகுலனின் விபீடணன் தனிமொழியும் கவிதையாக மாற்றத்தின் படைப்புச் சுழற்சியில் புராணத்தை இரவுடன் நறுக்கி ஒட்டவைத்த சிறு கிழிசல் துண்டுகள் உருள நகுலனின் குருஷேத்ரத் தேர்ச்சக்கரத்தின் நொறுங்கிய ஊழ்படிகிற கவிதைகள்

புராணத்தை தனித்தனியாக அவற்றின் பருண்மையை உதிர்த்து பூசுகிற நிறப்பொடிகள் வண்ணத்துப்பூச்சிகளின் கடல் குருதியிலிருந்தே பெற்றிருக்கலாம். நிறமற்றதாகும் புராணப்பரப்பில் கவிதையை பதுமைகளாக கம்பனின் விரல்தொடும் நிழல் நகுலனின் 'அழுகப்பழுத்த கனி' விரல்மாறி அடுத்தக்கட்டத்தில் கைலாஷ் சிவனின் கையெழுத்துப் பிரதியில் வழியும் 'நிறம் அழுகும் நிலா' கனவு தொலைத்தவன் இடம் பெயரல்

சுழற்சி விதி
பறவைகள் குழப்பத்தில் கதறலின் வித்தியாசம்
திசைகலற்றுப்போய்
கானக வெப்பம் நீர்மையின் நொதி
நிறம் அழுகும் நிலா'

கண்ணாடிக் குவளைக்குள் ஸால்ஹ்றினோ ஒயின். ஜான் ப்ரூஹேலின் ஓவியத்தில் உள்ள சீசா. அத்தனை யுத்தங்களுக்கும் ஈடாக பூமி வழங்கி இருக்கும் ஜாடிகள் புதைத்த ஓவியனின் ஒயின்காடி கற்றாழைச்சாராயம் குவளையில் ரெடஒயின் மறைந்து திராட்சைத் தோட்டம் விரிகிறது. மேல்நோக்கிய பயணத்தில சிறபவயல் தேவதைகள். கீழ்நோக்கிய பயணத்தில் கால் மாற்றிய நர்த்தனம் ஈசனும் அசுராகளும் கருப்பு மின்னலுக்குள் மறைந்த முதல சபை.

சகஸ்ரதளத்தில் அலைகள் கலாந்தத்தை அடைந்துவிட்டது நகுலனுக்கு. இன்று நகுலனுக்கு யாருடைய ஞாபகங்களும் இல்லை. வார்த்தைகளும் சாயைகளும் அற்றுப்போய்விடுமானால் கலாந்தத்தில் சுடலை வெளிச்சம் சூசிப்பெண்ணே... ரோஜாப்பூவே.... ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம் ஒடு;கக் காண்பது யோகியர் உள்ளம் ' உன்னை நீ என்று தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் கிட்டவா இது என்ன உன் கையா? கட் கட் கட் கட் கட் கட் கட் கட் கட் கட்

2007 மே 17 இரவு சுசீலா காணாமல் போகிறாள். பேரூர்கடா சாந்தவனம் ஆஸ்பத்திரி விசேஷ வார்டில் நகுலன் உடலைப் பிரிந்த சுசீலா இரவுச் சேவையில் பார்த்துக் கொண்டிருக்கும் செவிலிப் பெண் என்ற கடைசி பிரமை. தன்னுடைய கையை வைத்து அவர் விழிகளில் விரிந்த மரணத்தின் துடிப்பை தொடுகிறாள். வெதுவெதுத்த கண்ணீர் துளிகளை விம்மியவள் குரலெடுத்து வீறிட குடும்பத்திலுள்ளவர்களில் எங்கிருந்தோ வந்த பொர்த்தே... மூர்ச்சித்து சாய்ந்திருக்கும் வேளை... நகுலனைப் பார்க்க முடியவில்லை. பிளாஸ்கிலிருந்து கஞ்சி வெள்ளத்தை பீங்கான் கோப்பையில் சாய்த்து ஆற்றித் தருவதற்குள் திரும்புகிறார். உதடுகள் மீது மெதுவாக பீங்கான் நுனி படவும் அருந்தத் துடிக்கும் வேட்கையில் பருகும் மிடறுகள் நழுவுகின்றன உள்ளே. இவள் விரல்களின் நடுக்கம் கடைசிச் சுவையாக இறங்குகிறது ஆவியில். சுசீலா தன்னுள் நறுமண அகராதியெனும் சிகலிகை பட சிறிது ஒட்டி காதுவைத்து தாமதித்த நாடிகளை கேட்கிறாள். நகுலன் கண்கள் மேல் சாவின் இருள் மெல்ல வருகிறது. தன் கர்ச்சீப்பால் துடைக்கிறாள் ஒற்றியெடுத்து. வெள்ளி நிலவிலிருந்து மெலிதாகப் பிரியும் ஒளி இழைகள் புறப்பொருட்களின் மாயக் கருத்துருவத்திற்கு பிறப்பைத் தருவதாக நகுலனின் மரணம் காட்சியளிக்கிறது.

வெள்ளை நிற இரும்பு மேஜைமேல் மாத்திரைகள் மருந்து சீசாக்கள், ஊசிகள் மாற்றுத் துணி அடங்கிய ப்ரீப்கேஸ் திறந்திருக்கிறது. கண்ணாடிக்கு வெளியே அங்குமிங்கும் நடமாட்டம். நகுலன் படிந்த உடலின் வாசனை வியர்த்த கூந்தல் பரவிய பெண்ணுலகில் தைல ஓவியங்கள் குழம்பிய நனவிலிகளாய் சுழலும் மரணத்தின் தூரிகை வேகமாய் இயற்கை பகிர்ந்த நிறங்கள் மயங்கி காலம் வரைந்த சுசீலாவின் மணல் ஓவியம். அரபிக் கடலில் சுருள் கேசத்தலை சிந்தப்படாத சுசீலாவின் கண்ணீரைப் போன்று அமைதியை தாங்கியிருக்கிறது. அவர்கள் இருவரும் குளிரூட்டப்பட்ட அறைக்குள் விடைபெறும் தருணங்களை கண்ணாடிக்குமிழ் மூடிவிட்டிருந்தது. நிழலுருத் தோற்றங்கள் காட்சியின் மங்கியதோர் மயக்கத்தில் வெளிப்படுவதில் சுசீலாவின் கடைசி முத்தம் நகுலன் எழுதும் விரல்களுக்கிடையில் அதிர்ந்த ஆவியாக திடீரெனக் கீழே பாய்வதும் சிறகுகள் படிவதை நீல வெள்ளை றெக்கைகள் விரித்திருந்ததையும் படபடத்து மார்புகளில் அடிக்கும் விசிலும் தனிமை செறிவடையும் பேசாத சொல் நகுலன் மூடிய றெப்பை மேல் பிசுபிசுத்து கருத்து வருவதையும் ஊடுருவிய புகைபடிந்த கண்ணாடி தெரிந்தும் தெரியாத சுசீலாவை மறைக்கிறது.

கவிதையில் ரத்த வேட்கையில் சுசீலாவை தூக்கிய ஆண்டலைப் பறவை மூச்சில் விலகிய கிரகங்களும் விண்கோள்களும் அதன் சிறகு மடக்குகளில் நகுலன் பாடிய பாலைகளால் உருவெடுத்த மணல் கேலக்ஸிதான் தொட்டு தூக்கிய பெருங்கால் பறவை என உணர்ந்தாள் விண்ணில். எனவே எடையற்ற மணல் கேலக்ஸியின் விதியும் சுற்றுப் பாதைகளும் எழுத்தற்ற இட வல சுழற்சியாக இருந்தது.

‘ஆகாயவடிவமான
உன்னை நான்
ஊழி தோறும்
தேடி நிற்கிறேன்
பிற்பகல் 5 மணிக்கு சாவு
(அவன்) காயத்தில்
முட்டையிட்டது’

‘சுமார் 20 வருடங்களுக்கு முன்பிற்பகல்
ஐந்து மணிக்கு உன்னை நான் முதல்
முறையாகச் சந்தித்தேன்’

‘சுசீலாவின் கைவிரல்கள்
பார்த்த பரவசம்
அறையில் மீண்ட பிறகும்
அதன் பாதிப்பு;
ஐந்து விரல்களையும் இணைத்து
விரித்த வெற்றிலைப் போன்ற
என் கை கண்டு வெறிக்கிறேன்
ஒரு கணம்
கபிலரின் கை நினைவு’

நோபல் பரிசை மறுத்துவிட்ட ‘ போரிஸ் பாஸ்டர்நாக் கவிதை’ ஞாபகம் வந்தது. ‘ உனக்கு உரியவை அனைத்தையும் கொடுப்பது இது தான் படைப்பு. மேடையை நோக்கி ஒரு அடிமையைப் போல சென்றேன். பாஸ்டர்நாக்கின் டாக்டர் ஷிவாக்கோ கை மூலம் எழுதிய கடிதம் கடைசியாய் வந்தது நகுலன் மறைவை அறிந்த அதிர்ச்சியில். ‘ பாஸ்டர்நாக் முந்திய பகலையும் பிந்திய இரவையும் வெறுமை கொண்ட தனிமையில் நிலவிய தன் ‘வெனிஸ்’ கவிதையை எழுதிய கடிதம் நகுலனுக்கு கடைசியாக வந்து சேர்ந்தது. சொர்க்கத்துக்கு தாந்தேவை அழைக்கும் அவரது கடந்த காலப் பால்யத்தோழி பீட்ரைஸ்யிடம் அவரை கொண்டு சேர்ப்பதற்கான வாக்கு தத்தம் அளிக்க பண்டைய ரோமானியக் கவிஞர் வர்ஜிலின் ஆவி தாந்தே காலத்திற்கு முற்காலத்தில் இருந்து இன்னமும் வந்து தோன்றியிராதபடி (டிவைன் காமெடி) பிரிக்கப்படாமல் நகுலன் எதிரே V வடிவ வாசிப்பு பலகை மீது மூடப்பட்டிருந்தது ஒரு புறத்தில் மறுபடியும் வெறுமையாக அப்போது. ‘ இப்பொழுதும் அங்குதான் இருக்கிறீர்களா’ என்று கேட்டதற்கு ‘ எப்பொழுதும் அங்கு தான் இருப்பேன்’ என்றது காலமற்ற நகுலனின் சிருஷ்டி கணம். தாந்தே நகுலனை பீட்ரைஸ் என்று அழைக்கும் அசரீரி தொலைவில் போல் கேட்கிறது. நகுலமே என V வடிவ வாசிப்புப்பலகை சுற்றி வட்டமிடும் நினைவுகளாக லாரன்ஸ் டியூராலின் கவிதைகள். அருகே கழற்றி வைக்கப்பட்டிருந்த நகுலனின் மூக்குக் கண்ணாடியில் டியூராலின் கவிதைகள் பிரதிபலித்தவுடன் நகுலனின் கண்ணாடியை அணிந்து கொண்ட டியூராலின் கவிதைகள் ‘ வாட்டர்கலர் வெனிஸ்’ மற்றும் பிளைண்டு ஹோமர்’ ஒலிநாடா போல் ஓடத் தொடங்கியது

செல் பரப்பில்.

' எழுதுவதற்கு ஒன்றும் இல்லாமல் எழுதிக் குவிப்பது
அதன் பொருட்டு அனைவரும் பாராட்டுவது என்பது
அகஸ்மாத்தாகத் திரும்பிப் பார்த்த பொழுது என்நாய்
(எனக்கும் ஒரு நாய் இருக்கிறது) அதன் வாலைத்
துரிதமாக ஆட்டியது
எனக்கு என்னிடமிருந்து எப்படித் தப்புவது என்று
தெரியவில்லை
அடுத்த கணம் ஒரு பிரமை
என் கையில் தொழுநோய் பிடித்துவிட்டது போல்
இந்த கையை வைத்துக்கொண்டு நான்
எவ்வாறு சுசீலாவை அணுக முடியும்? '

வேனிற்காலம் தகிக்கும் இராத்திரி சுசீலா எனும் ஆவி முழுமறதியில் மொழி உடலாகி புல்லாகிப் பூண்டாகி புழுவான நகுலன் உடலை கடந்து அல்லது உள்ளிருந்து கொண்டே ' திரும்பிப் பார்க்கையில் / உருவத்தின் உள்ளுருவம் / ஒவ்வொன்றாக ' உணர்வற்ற கனவு போன்ற ஒரு குழப்பத்தில் பிராந்தி நெடிக்கும் குருதியின் ரகஸிய உந்தலில் வெளியேறி ஒரு நீலப்பூச்சி யுருவத்தில் வந்து சேர்வதைப் பார்த்தேன். நகுலன் இல்லாத காஸ்ஃப் லிங்ஸ் ரோடு நெடுகிக் கடந்து நாவல்களாலும் பிராந்திக் குப்பிகளாலும் சரித்திரப் புனைவிலும் கவிதையின் பூர்வீக வீடு விசாரத்தில் பேசியவை எல்லாம் இருந்து கொண்டிருந்த சுண்ணாம்பு சுவர் பொந்துகளில் காரை உதிர்ந்து கொண்டிருக்க நூறு பொந்துகளில் புகுந்த' ஓயாத மனக்கிளிகள் பாஷ்யத்தை நிறுத்த சற்றே எக்கனி தரட்டும்?' பெருந்தேவிக்கும் கிளி முன் வைத்து பாடியது என்னவெனில் 'நாய்கள்' கடைசிப் பக்கத்தில் ' ... பிரத்தியட்ஷத்தைக் காண, விதேக முக்தி பெறஒரு அசுர முயற்சிதானா? .... அவனும் அந்த நாயும் மாத்திரம். இங்கு நவீனன் நிறுத்தினான். மனிதன் உய்ய ஒரு நாய். புராதன ஞானம். மெய்ப்பொருள் அதன பாஷ்யம் அதாவது... ' நகுலனின் நாய் நாவலே நவீனத்தின் முதல் பாஷ்யம். விட்டு பிரியாத நாயின் அனுபூதியில் கரைந்த நகுல பாஷ்யம் 70ல் கடந்துவர கிளி கொத்திக் கொடுத்த கனிதான் பெருதேவி 2005ல் சிருஷ்டித்த இக்கனி கிளியாகும் பாஷ்யம் எனவே அதை நிறுத்த நாயின் மோப்பத் தடத்தில் 96 வகை ஞானத்தில் நாயின் ஊளை சென்ற மரமானால் அன்றி மனக்கிளிகளை கனிவிக்க முடியாது.

நவீனன் வராண்டா காலியாக காற்றில் ஆடும் தகரங்கள் தனித்து ஒலி உரச காத்திருக்கும் சாயைகளைக் கண்டு கொள்ளாமல் மாயச் சாளரம் தோன்ற நுழைந்த ஆவி நீலப் பூச்சி உணவருந்த மறுத்து, தனக்குத் தானே சமாதியைப் பட்டு நூலுமிழ இழைத்திழைத்து இயற்றிய கவிதையின் மர்மங்கள் வளையும் குவிகை வடிவில் சவப் போர்வை நெய்கிறவசிய மண் நக்கி மந்திரிக்கப்பட்ட சொல்லாடலைத் தனக்கே நிகழ்ந்த சன்னல் வழியே எட்டிப்பார்த்தவர் டி.கே. துரைசாமி.

சுசீலா ஸ்தூலம் வற்றிக் கரைந்ததொரு பூச்சியாய் நகர்வதற்கு கால்களற்று உடல் இளைத்து சருகென சமாதிமண் இலையென படிகிறாள். ஒவ்வொரு உச்சி வேளை பரிதியோ திங்களோ பளிச்சிட சர்ப்பமாய் உள்ளிருந்தே நெளிந்த காமம் வாலில் விசும்பிப் பிணைந்த சாரையின் சீற்றம் மெலிந்து மௌனம் இழைத்த நீல மயக்கம்.

'கொல்லிமலையி
லொருபாவை;
அதைக் கண்டு நின்றவர்
காணாமல் போனார்' யாருமில்லை மஞ்சள் மஞ்சளாய் பித்தப் பூக்கள் வெளியில்

மரம் பற்றி எரிந்து கொண்டிருந்தது. தற்கொலை பற்றிய நகுலன் மரமாகி நெற்றாக கவிதை சிதறி திகம்பர நிலையில் சடாமரமாய் விதைக்குள் சுருண்ட கருவாகக் கிளைமடக்கிக் குமுறல். வட்டமான சூரல் மேஜை மேல் தாயுமானவர் பாடல், ஞானவெட்டியான், காகபுசுண்டர், காளங்கி, அகப்பேயும் பிடித்த இருட்டில் பேயுருக் கொண்ட திருவாலங்காட்டு அற்புதத் திருவந்தாதி, வேம்பத்தூர் பராபரமாலை, ஜாய்ஸின் டப்ளின்ஸ், வெர்ஜீனியா உல்ஃப் டைரி, பிஜாய்ஸ் பிராந்திக் குப்பி, சோடா, வெற்றிலைச் சம்புடத்தில் வேண்டிய சாமக் கிரியைகள், சுண்ணாம்பு பிரயோகம் அதிகமானால் பித்தனின் காஞ்சனையின் தோற்றம். சூன்யத்தில் சுசீலாவைத் தேட, அவள் விட்டுச் சென்ற காலியிடத்தை மான் மார்க் புகையிலையின் கார நெடியில் காஞ்சனை உள்கூடத்தில் சிணுக்கோலியால் முடியுலர்த்தும் சிலுப்பலில் நீர்திவலைகள் உருள்கின்றன. அச்சுதன் நாய் தூக்கத்தில் காஞ்சனை என் நாவலைத் திறக்கிறாள். நாயின் மோப்பத் தடத்தில் பித்தனின் பளிச்சென்ற நடை ஒரு கலா போதத்துடன் அனந்தபுரியில் புதையுண்ட அவன் கபாலத்தை ஈசன் ஆடி எடுக்க இரு கைகளையும் சுடலையில் பூட்டி அரவணைக்க திரிபுரம் எரிகிறது. தோண்டத் தோண்ட அடிமுடி காணாப்

புதுமைப்பித்த யாளியின் கபாலம். பித்தனும் இங்கே. அவன் தேகம் யாழாய் எரிந்து கொண்டிருக்கிறது. 'சாவதும் புதுவதன்றே' வென புறநானூற்று கவி அசரீரியாய் சொல்லி மறைகிறான்.

'வாக்கு மூலம்' திறந்து 'சுடுகாட்டில் அவன் தன் லயத்தில் நர்த்தனமிடுகிறான். முதல் என்று கூட சொல்வது நினைவின் பிசகு தான் என்று சொல்ல வேண்டும்' 'நவீனன் டைரி' யில் 'பல்லக்குத் தூக்கிகளை, வாடகைக்கு பிணம் சுமப்பவர்களை, பழம் புஸ்தகம் விற்பவர்களை, புதுப் பணம் படைத்தவர்களை, சாதாரண மனிதர்களைக் கண்டால் புருவம் உயர்த்திப் பேசுபவர்களை, இலக்கிய ரவுடிகளை, இயற்கைாகவே கோபத்தினால் வசைபாடும் விற்பன்னர்களை... எனக்கு நான் சுமக்கும் சிலுவையாக இருக்கும் என்னை... இந்த தெருவிலிருந்து அந்த தெருவிற்குத் தாண்டும் பொழுது யாரோ எனக்கு முன் சென்று மறைவது போன்ற ஒரு தோற்றம்'.

கருமை பூசிய கொல்லம் இரட்டை யானை ஓடுகள் போட்ட என் வீடு விண்ணிலிருந்து கீழ்பாயும் கோடுகளாய் தகர்ந்து வீடு பிளவுண்ட பாதங்களிலிருந்து சுவர் விருவுவோடிக் கிறுக்கி எழுத்தழிந்த எலும்புப் பட்டிகையில், சித்திரம் தீர்ந்த மறதியில் நகுலன் யார் ? என்று கேட்க கேட்க நிறமற்ற அகாலம் பழுக்கிறது தலைக்குள். பதனழிந்த பொருட்களால் நகுலனின் பாழ் பூசிய புஸ்தகங்கள் கருப்பு மர பீரோ நிரம்பி வழியும் உலக நாவல்களின் மர்மமான ரேகைகள் சாயைகளாய் தரையைப் பற்றிக் கொள்ள திரும்ப அசையும் கண்ணாடி ரசத்தின் நீரோட்டத்தில் மிதந்தவாறு நண்பகல் பேய்களும் எலும்பின் எண்ணங்களைக் குடித்து மயங்கும் ஜெர்மன் வால்கிளாக்கின் டிக்... டாக்.....டிக்.... டாக்.... 'நகுலன் இருக்கிறாரா ...' நிசப்தம் கடிகாரம் ஓடிக்கொண்டே 'நகுலன் இல்லை' 'இவர்கள்' நாவலைப் பற்றி சுடுவனத்தில் பிரசாத்தும் பொர்த்தேயின் குமாரனும் பேசிக் கொண்டதை மரணத்தில் ஆயிரம் ஜன்னல்கள் திறந்த ஐராவதம் புகையுருவாய் கேட்டுக் கொண்டிருந்தது. 'இவர்கள்' நாவலின் தலைகளாய் பச்சை நிறமாகிவிட கைகளோ நீல நிறமாய் இருக்கின்றன. ஒருவன் திரும்பி 'சுசீலாவை தூக்கி முத்தம்பட்ட கடல்' என ஏதேதோ பொர்த்தேயின் குமாரன் நாவல்களின் மடிப்புக்குள் வளைகிறான்.

அரிஸ்டோ லாட்ஜிலிருந்து கருப்பு ஆட்டோவில் கவுடியார் வந்து பார்த்த போது பூச்சி தன் சமாதியைத் தகர்த்த லார்வா பருவம் உடைபட சிறகு நீட்டி மாயப்பொடி பூசிய நிறம் பல சேரும் இயற்கை வடிவத்தில் 'இலைப்பச்சை கிளிச் சிவப்பு' வந்த வழியே போனவாறும் வருகிறவழியே சென்றவாறும் மரண முகமூடி அணிந்த வண்ணத்துப்பூச்சி இருளை அடித்துப் பறந்தவாறு அதன் அசரீரி கனன்றவரி 'முனி கொள்' எனவே. சாவுக்கு முன்னறிகுறியாக கருப்பு நாய் வடிவமுனி நகர்ந்து வர இறந்தபடி சாம்பல் கொண்ட மனர் ஏந்தி அதன் வாசனை வாக்குமூலம் நாவலிலும் கிழித்த காகிதம் குருதி கசிய 'அதற்கு முன்னரே ஆரம்பித்து அஸ்தி கொண்டு வந்த அன்று இறந்தவர் நினைவு உலர்வதற்கு முன் பொருள் பற்றி மயான தாண்டவம். நிழல்கள் சிரிக்கின்றன. இது என்ன ? நடுக்கூடத்தில் பிரேதம் கிடந்த இடத்தில் ராட்சஸ இரும்புச் சக்கரங்கள்...' கருமசகு கசிய சுற்றத் தொடங்கிய புனைவுக் காட்சிகளின் நிறுவனம் இங்கே வேகமடையும் சாவு நிழல்

போலும் வானில் பெருநாய் மீன் மண்டலம்.

அசுரனுமான மயன் கிண்ணவடிவமான பவழத்தில் சிற்பம் தீட்ட கும்பகர்ணன் துயிலமைந்த சுரங்க மாளிகையில் பவழநிறச் சலவைக்கல் விநோத ஓவியத்தில் பவழத் தொகுதியின் எலும்புக் கூடுகள் கனவு மரத்தில் சுற்றித் திரிவதில் முற்கால மைக்கோலினால் நவீனன் டைரியை படிகச் சித்திரங்களாக மாற்றவும் உவர் நிலம் பிசைந்த சுதையால் மண்ணீட்டு பழுப்பு பூசிச் சுட்ட உருவங்கள் பேசும் சக்கரவாளம். இனங்களை மாற்றி மாற்றிக் கலந்த மொழி இனக்கலப்பே மொழிபல கலக்கும் ஓர்மை. அசுர மலர்த்துகளை சூர்ப்பனகை நாசியால் பரவச் செய்த நகுலன் தோட்டத்து பித்தப்பூ கருவகத்துடன் இணைந்து அயலிகைக் கலப்பில் தன் மரபும் பிரிந்தார். தசமுகன் சோகத்தில் மூழ்க சிங்காதனப் படிகளில் அமைந்த கணியப் புலமைமிக்க அறிவன் தேயப் பதுமைகள் இவை. விஞ்ஞான அற்புதக் கதைகளும் மீமனிதத் தோற்றங்களும் புத்த ஜாதகத்தை சம்பாபதித் தேவதைப் பறவை கதை சொல்மரபும் டோல்கின் புராண மோதிரம் மூன்றையும் கடலடிக் கோட்டையில் மயில்ராவணன் பெற்றிருந்தான் நெபுலுங்கன் புராணத்திற்கு முன்பே.

' தலை தூங்கு மரங்கள் ' நவீனப் பொறியமைவில் சுழலும் குடைராட்டினத் தலைகளில் நகுலன் சிரசு. ஜிங்லி ஜிங்லி ஜிங்லி உலோக ஓசையிட மூளை எலும்பைக் கழித்துண்ணும் ஆண்டலைப் பறவை அலகினால் புரட்டிய நகுலன் கபாலம் எடுக்க உருவற்ற கபாலங்கள் ஒன்று மாறி ஒன்று தோற்றத்திலும் மறைவிலும் உரையாடத் தலைதூங்கு மரங்கள் கல் பழுக்க உதிரும். இக்கனி தலைகளென எக்கனி தரட்டும் / பாஷ்யத்தை நிறுத்தச் சொல்.... கனிந்த நகுலச்சாறு ஒளியூறும் கல். கல்லாக இருக்கிறது கல். ' காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற இளைப்பை ஏட்டிலே எழுத முடியுமா ' அகவல் ஆறு சொல்ல மணலல் எண்ணி முடியாத மனக்கிளிகள் சித்திர மாடத்துச் சுண்ணாம்புக் கிளிகளாய் மதுரை துஞ்ச உதிரும் மாசி வீதி சுதைபூசிய கிளிகள் கரையும் ஓசை கல்லாகவும் மிருகமாகவும் அது இருக்கிறது. நகுலன் சுருள்படும் இந்திரனின் ஆயிரங்கண்ணுடைய கபிலநத்தை. மெல்ல ஊர்ந்து அழுக்கில் புதைந்து மண்ணில் புரண்டு பித்தக் கல்லோடையில் நுண்ணிய நன்னீர் சுரக்கும் இந்திரபூச்சி. கடலிலே நகுலன் விழி கடல் வெண்கலச் செதில்களைத் தரிக்கும் போது அமைதியின் பதுங்கிடத்தில் ஓசையடங்கி இருக்கிறது ராவணன் விழி எனபவற்றில் ஞானக் கூத்தன் பிடித்தது ராவணன் விழிகளைத்தான். நகுலன் பிடித்ததும்.

' பத்துத் தலையில் பதினெட்டுப் பார்வையும்..
கண்கள் இரண்டு குறைவாகக் கண்டது...

பரதவர் அதனை ராவணன் விழி என்றார் ' ஞானக்கூத்தன் சொல்லாவிட்டாலும் நகுலன் விழிகள் இதுவுமது ' சிதறிக் கிடந்தன பால் நிறச் சோழிகள் ' . ஆனால் என் கபாலமோ இடப்பக்கம் ராவணன் விழியும் வலப்பக்கம் நகுலன் விழியும் தனுஷ்கோடிப் பட்டினத்தில் ஓயாமல் அழிந்து கபாலம் புதைப்பகழ்வுகளில் உளங்கூர்ந்த அறியப்படாத மணல் கேலிக்களியாக தனுஷ்கோடியும் இருந்தது. நகுலனை மணல் கோட்பாடாக வருங்காலத்தின் நூலியலாக மொழியுருச் செய்ய சுடலல் எரியும் பரிதியும் ஓர் தலையென

உலோகங்களைக் கக்கி ககனமெங்கும் பிறரறியாத் தனிக்குழு மொழிகள் கலந்த வெள்ளிய பொடியை பழங் கற்படைச் சமாதியில் தொட்டதில் மிருதுவிலும் மெல்லிய ஆவியால் பீடிக்கப்பட்டிருந்தேன் 'காணும் கல்லைப் போல் நான் கனத்துப் போனது'.

'மனமே / மண்ணாகி மரமாகிக் / புல்லாகிப் பூண்டாகிக் / கல்லாகிக் கற்பாந்தகாலம் / கிடந்தாயோ? ' ' எல்லே... பழங்கிளியே, கனிம அலகெடுத்து கடக்கும் சொல்லே என் கிளியே சுசீலாவின் மணல் கேலக்ஸி 206ல் ஆவிகளின் புஸ்தகங்களாகவும் கல்மடிப்பான புதிர் படிகளில் சுற்றிச் செல்லும் பலிச்சடங்கில் அகப்பட்டுக் கொண்ட மனக்கிளிகள் 'பார் முதல் பூதம்' தொட்டதும் ஆனது கல்.

'சகாப்தத்தின் நிசப்தம்'

' சிலை முன் / கற்சிலை முன் / பேச்சென்ன ? / மூச்சென்ன? / சிலைபேச ? .... கல்லும் களிக்கச் சிறு மானுடன் / செவி சாய்த்துக் கேட்டான்'

'கல்லும் கற்பனை கடந்து சொல்லும்..... கற்சொரூபமாக சடத்தில் சித்திக்கும் / என்னைக் கல்லென்று / சொல்.... ' தலை தூங்கு மரக்கற்கனி தலைகளாய் முளைத்த கல் முகம் சாக்கிய மூதாட்டி சம்பாபதி 'பேய்கள் நடமாடும் இந்த நள்ளிரவில் இச்சுடலை வாயில் நின்று என்னை ஏன் அழைத்தாய் சுசீலா?'

'சாக்யா, பால்வையில் மூழ்கி கதை போடும் சம்பாபதி பறவையே! முப்புரி நூலணிந்த சார்ங்களன் என்றோ சோதரர்கள் என் சவத்திற்கே நூல் பூட்டினர். சாவு மென்ற சிருஷ்டிதன் நான். இந்த நூலை சாவிலும் கயிறாய் தன்னுள் மறையும் அமரரின் அடக்கத்தை நோக வைத்து தலை தூங்கும் மரங்களில் கட்டுகிறீர் கேளும் சுவாமி... ' இந்த ஊரில் மேட்டுத்தெரு என வீதி. வண்ணான்குடி கசாப்புக்கடை. மனித சமூகத்தின் எச்சங்கள் தெரு நாய்கள். காகாவென கத்தும் விகாரமான காகங்கள். கோடியில் நின்று பார்த்தால் மறு கோடியில் பார்ப்பனர்கள் மயானம்' இன்னுங் கேளே.... எட்டிய வெளி சாம்பல் நிறக் கற்கள் உருளும் சக்கரவாளம் வாளமலை சங்கிலி கோர்த்து பாலறைகள் மையிருள புகார் நகர்ப்புலவரோடு சக்கரவாளக் கோட்டத்தில் நகுலன் உடல் எரிந்து கொண்டு இருக்கிறது. ஒரு நண்டு ஆயுட்காலத்தில் பாம்பைபோல தான் யாரென்று 18 முறை சட்டை உரிக்கிறது. 'கேட்டிலையோ நீயுந்தான்...' காதுகளை மடித்து பளிங்கு நாவலுக்குள் நான் நானாக நானூறு ஒன்றில் சிதறிய விதம் கயிறுபட்டு துரத்தும் முகமூடி பூட்டுகிறாய் நகுலனுக்கு. என் சவத்துக்கு இலக்கியமே உயிரூட்டும்.

வாசக ஷற்பாத்திரரே.... கேளும், விழிகளை நூலால் தைக்கிறார் பைத்திய பாலை கொண்ட நாக்கை உள்ளே மடித்து கவிதை திறந்து கொள்ளும் உதடுகளை சொல்லைப் பூட்டித் தைக்கிறார் வெள்ளைத் தொலி உலர்த்தி இந்த எட்டடிக் குச்சிக்குப் போர்த்தி அதையும் தைத்த ஊசி காதறுந்து ஐயரென்றோ யாருமற்ற என்னை யாரோவான இவர்கள் கட்டி இழுத்த நூலில் சாயம் போன பாவையாட்டி குரல் பல காட்டும் ஆடல் பற்றில் வாராயோ அண்ணலே ராவணா.... ஜடாயுவாய் சுடலை வெடிக்கப் பறந்தேன்

'இந்தப் பார்ப்பனத் தாய் கோதமை அழுகிறாளே.... சார்ங்களன் உடல் களைந்து தசமுகன் பக்கம் போய் அரக்கியானேன. சூர்ப்பனகை அழுகையில் துடித்த மனம் எனக்கு. ராமனின் கடவுள் பற்று அறுத்த ஜடாயு நான். அவள் அறுபட்ட முலை பொங்கும் தமிழை யாம் கவிதை செய்தோம். ஞானம் நாசியில் அகராதி அவளுக்கு. தங்காள் சூர்ப்பனகை சுவாச கோஸத்தில் விட்டுப்பிரியா அனுபூதியை நாய்களின் நூறு பூக்கள் மந்திரம் பரவுகிற ஊளையின் வெளிச்சத்தை வரையும் இருட்டில் நகுலனோடு. என் உதிரம் கொதிக்குதண்ணே ராவணா..... மதுவா பூமது ஊறறிக் கொடு. எத்தனை பூவிலோ அரிட்டம் படைத்த நீ என் குவளையை நிரப்பு நேரமாகிவிட்டது நெடு தூரம் போக வேண்டும் அரக்கியும் அவனுமானேன். ஆதலால்' எனக்குப் பூட்டிய இழிமுகத்தை மட்டுமல்லாது / நீ யணிந்து கொண்ட உயா முகத்தையும்' (மதி) புரிந்து கொள்வாய் ஊழித் தெய்வமே'

'அப்படியா சரிசரி' யென ஆண்டலைப் புள் கற்பரந்த சுடுவனத்தில் நினைவுக் கல வைத்துப் பலர் வீரக்கல் நின்று உருளும் கற்களைத் தூக்கிப் பறந்த பறவைகள் போய் போட குப்புதும்பாய் உயரும் பிதிர்ச்சபங்கு. எண்ணையாகவும் சவர்க்காரங்களாகவும் இருக்கும் கற்களும் இருக்கின்றன. 'தூரத்து பனிமலையும்' நெருங்கிய பின் சுடுகல ஆகும் 'கடந்தாலோ இரத்தம் சவாரிக் கரைந்த செம்புழுதி' (அபி) அவை இலைகள் அல்லது மணற் கற்களாக செதில மண் சிந்தவும் கக்காங்கல் பொருக்கு கால் பட்டால் பொடியாகும் மணற்கல் சீக்காங்கல் விழிவெப்பம் ஈர்த்து கவிதையை குளிர்விக்க சிங்காங்கல கூடுப்பகற்றி ரதத்சமநிலையை கனியும் கை கண்ட கவியிடத்து கல்மருத்துவம். கூழாங்கற்களை பையிலிட்டு உரசினால் ஊளையிடும் நரிகளைப் போல. பொக்குக்கல நுரைகளும் மணலும் வெளிகளும் சுருள்பட்டுத் தோற்றமாக அவை ஒவ்வொன்றும் 'வரையறை இல்லா சிறுகல்' (ஸ்ரீநேசன்) கரும்பளிங்கு கற்கோடாலி செதுக்கி நகர்ந்த ஊழிப்பாதையில் கற்கள் விமம அவை கற்களாகவே ஸ்திதி கொண்டுள்ளவை. அதை நாம் வழிபடுவதில் பிராந்தியும் சுருட்டுப்படையலும் குடித்து நகுலன் புகைக்க ஊரைச் சுற்றிச் சுற்றும் புகைச்சுருள் வளைந்தவாறு ' என்றாலும் கற்கள் இருள் குடித்த சொல் கருப்பு மின்னல வீற்டும் குயில்கோட் ஊழி சுழன்றதில் சுழிபடு; வட்டத்தில் மிதக்கும் கற்கள் நீரிலும் மூழ்காமல் வானரங்கள் போட குரங்குப் பாலத்தில் கல்லும மிதவை என்பார். என் தசை சலவைக்கல் நான் கடந்து சென்ற அதே முறையில் தோற்ற அமைவாகிற சலவைக்கல்லால் இந்த சக்கிமுக்கி கல்லில் உள்ளார்ந்துள்ள தீப்பொறி மிதந்து 'வரையில்லா சிறுக்கல்' ஆனது. தசை தூங்கு மரக்கிளையில் கால்வைத்து உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்துடன் பலிநெடுங்கற்படையில் (Slaughter Stone) தன் முட்டைகளில் மீதமர்ந்து கடுஞ்சூலுடனே அடைகாக்கும் பொறிகளும் வரிகளும் பொருந்திய சிறையமைந்த ஆண்டலைக் குஞ்சுகள் நடுக்குறபாலை வழிகளில் நடுகற்சிலைக்கு படையலிட்ட பலிப்புலவை காலால் தூக்கி உடற்குருதி படிந்த புலால் நாறும் பெரிய சிறையை வில்லாய் வளைத்துப் பொத்தி ஊட்ட ஆண்டலைக் குஞ்சுகளின் இசையெழுகிற சக்கரவாளம். நகுலன் உடல் நெருப்புக் கல்லாக ஜ்வாலை விட்டு திசை

நாவுகள் சுற்றி பரவும்.

தன் முட்டைகளில் மீதமர்ந்து கடுஞ்சூலுடனே அடைகாக்கும் பொறிகளும் வரிகளும் பொருந்திய சிறையமைந்த ஆண்டலைக் குஞ்சுகள் நடுக்குறபாலை வழிகளில் நடுகற்சிலைக்கு படையலிட்ட பலிப்புலவை காலால் தூக்கி உடற்குருதி படிந்த புலால் நாறும் பெரிய சிறையை வில்லாய் வளைத்துப் பொத்தி ஊட்ட ஆண்டலைக் குஞ்சுகளின இசையெழுகிற சக்கரவாளம். நகுலன் உடல் நெருப்புக் கல்லாக ஜ்வாலை விட்டு திசை நாவுகள் சுற்றி பரவும்.

'ஆண்டலைப் புள்ளுக்குத் தன் பெடை ஈன்ற பறழாகிய மகனே' என நகுலனைக் குறிப்பிட்டாள் கலித்தொகைக் கூன்தாய் அதாவது.

பென்ஜான்சன் பதினைந்தாம் நூற்றாண்டு கொண்டுவந்த ரஸவாதிக் காவிய நாடகத்தில் உரையாடும் பாரஸெலஸஸின் ரோஜாவைக் கலைத்தபடி யாரோ புனைகதையும் கடந்து செல்கிறது போர்ஹேயின் விதி எனவே. கனவில் கேட்ட 'நாய்களின்'

ஊளை இயற்கை வாட்டம் உறுவதை முன்குறிப்பதாகும். நாயின் கனவு முடிவுற்று விட்டால் வாழ்வின் வளத்தையும் வலிமையையும் உலகம் இழந்து விடும்.

நகுலன் உலோகம் வடித்த குதிரைக் கண்ணாடி வீற்றிருக்கும் தலைநகர் மேல் எங்கும் திரும்பியவாறு வளைந்து பார்க்கிறது ஓட்டத்தில் பறக்கும் சட்டைமுனி தைக்கப்பட்ட அலைவீசிய ஆடைகளில் எழுதப்படும் வாலைவாக்கு எல்லாவற்றையும் கிரகிக்கும் உலோகக் குதிரை கண்ணாடியுள் கடந்து கொண்டிருக்கும் வாச்சியார்த்தம் என்ன? குதிரையின் கண்களுக்கு கருப்பு வெள்ளை நிறங்கள் தவிர மற்ற எதுவும் தெரிவதில்லை.

காற்றின் இழுவலிமை கண்ணாடியாக நகுலன் கபாலத்தில் இவர பூட்டப்பட்டதும் ரஸவாதியாகிச் சூரியனற்ற கடலில் பாய்கிற உலோக அலை ஏகும் குதிரையான பேசுபுலம்பற் பாடலாகி அலைஏறும் கடல் விளிம்பில் இளவரசர் கௌதமாவின் குதிரை கண்டகா தடங்கள் விட்டுச் சென்ற வரி....

மீனின் செதிள்களே அறைகள், வேதாளங்களே வசிப்பிடம், ஊதாநிறக் கிளிஞ்சல் சிப்பியும் சுவர்களும் குருதிச் சிவப்பான கனிமப் பொருட்களுமே புகுவழி என்பதால் தானே கடவுள் கீழிறங்கி நீரிலும் வசிக்கிறார்!

தனுஷ்கோடிப்பட்டணமாம் நீருக்கடியில் நகர்ந்துவரும் பௌத்தப் பேராலயத்தில் பைத்தியம் பிடித்த பிக்குகள் மூழ்கிய ரயில் பெட்டிகளில் துயிலும் குழந்தைகளை மீன்களின் முதுகில் ஏந்தி கோடுபோட்டு நகரும் நீலச் சிப்பிகளில் தேவதைகளும் போதிதர்மாவின் வட்டக்கடற்குதிரைகளும் நீந்தியே கடந்த நட்சத்திரங்களுக்கு அப்பால் கடல் குடித்த நகுலன்விழி இமைகீறிப் பார்க்கிற இவ்வேளை.

நகுலன் நிலவுடன் சூரியனைச் சேர்ந்திணைத்து எழுதும் வரிகளில் ஒளியை நிறுமிக்கிறான். நெருப்புயிர்க்கும் வேதாளம் நுகத்தடியில் பூட்டப்பட்டிருக்கிறது. கடவுள் குருடராக நகுலன் விழிகளால் உட்பொதிக்கப்பட்டுள்ள அரண்மனை போர்ஹேயினுடைய வீடு. இப்போது இடப்புறம் இப்போது வலப்புறம் எனச் சொல் பொருள் பெயர அவர் திருகுமறுகாகப் புதிர் வழிகளில் சுழல்வுற்றிருக்கிறார்.

சீனராகும் தமிழ்ச் சித்தன் போகரின் குதிரையோ தேவதை மார்பு, அழகான கூந்தல் எளிதில் மன வெழுச்சி பெறும் இயல்பு.

நகுலன் குதிரையோ முயலின் தீத்தாங்கும் கண்கள், மையிட்டு சுசீலா தீட்டுகிறாள் தன்விழி கொடுத்து. உலர்ந்த தலை, மிகவிரைவான ஓட்டம். ஒரு கண் குருடான போர்ஹேயின் குதிரையோ கதைக்கான நரியின் அழகியவால் சிறியகாதுகள் கெச்சை நடை. அவர் சொன்னதாக ஞாபகம் ' சுசீலா எட்டு கால்கள் கொண்ட குதிரை நிலத்திலும் கடலிலும் பயணிக்கக் கூடியது சாம்பல் நிறமுடையது எட்டுத்திசை விரியும் காற்றின் வகை வீச விளங்குகிறது ஆனால்.... செர்வாண்டஸின் டான்கெகாட்டே நாவலைப் புரட்டுங்கள்.. சான்டோ பன்ஷாவின் குதிரைக்குப் பேர் ' ட்ராப்பிள்' மாறிமாறிக் காலெடுத்துப் பறந்து வரும்

சுசீலாவின் எட்டுக் கால் தடம் எங்கெங்கோ எஞ்சவிட்ட வார்த்தைகள் சில நிறம்மாறிக் கொண்டிருக்கின்றன. கெமிலியன் குதிரையை திறந்து உள்ளே மறைந்திருக்கும் ட்ரோஜன் வீரனைப் போல் நகுலன் குதிரைக் கண்ணாடி மேல் எழுகிறது!

காலெடுத்துப் பறந்து வரும் சுசீலா கருஞ்சிவப்பில் தங்கி வெகுநேரம் அண்ணாந்து பூமியின் வெண்நுரைகளை வாய் ஓரங்களில் அலட்சியமாய் தெறித்திடப் பறந்து செல்லும் சாம்பல் வெளி.

அனல் தெறிக்கும் குதிரைக் கால்கள் ஒன்று மாறி ஒன்று மறைய தோன்றித் தோன்றாமல் மணல் கேலக்ஸியில் ஓடுங்கால் தீயுமிழ அணுகமுடியாத் தனிமைக்கிரகம் சுழலும் விதியுடன் குதிரைக் கண்ணாடி. மனிதக் குரலில் பேசும் குதிரையை அழைத்தவாறு நகுலன் சென்று குருந்த மலர் நிறமுள்ள சந்திரனின் இருபத்தி ஏழு குதிரைகளில் ஒன்று மறைய ஒன்று கலந்து மிதக்கும் நீலம்.

போகர் சத்தகாண்டத்தைக் குதிரைச் சேணத்தில் பூட்டியிருந்தும் ரஸவாத மூலிகை மையிட்ட அவர் குதிரைக்குப் பேர் டிராகன் மீன். ஜென்மத்தின் ஒரு நெடி உருகும் தூரத்தில்.... அது இருக்கால் மட்டுமே கொண்டது என்று வில்லுக்கு அர்ஜுனன், பரிக்கு நகுலன் எனும் புராணம். பிசுக்கேறிய பரட்டைத்தலையும் குளிக்காத உடலும் கோவண ஆடையுமாய் நெடுங்காலம் மூலிகை தேடி அலையும் நாவறண்ட தாகம்.

குதிரையும் களைத்துவிட்டது. 'தடாகம் தேடிவந்தோம் இங்கு' தோற்றம் கண்டு ஏகிய செப்பிடு வித்தைக்காரரும் போலிதரும் சுற்றி ' நில்லாதே எதார்த்தமே தூரவிலகு' என தன்னைத் தானே பெற்றுவந்த அந்தப் பூனையை அழைத்து போகர் அதன் காதிலே சொன்னார். போகர் சொல்லச் சொல்ல மஞ்சள் நிறமடைந்த பூனையும் அற்புதமாகத் திரும்பி விண்ணுக்கடியில் வாலாட்டியது.

பதுங்கிப் பதுங்கிப்பைய ஊர்ந்து செல்லும் மரணம் அதன் இருள் பூசிய வால் அசைவு கொள்ள எந்தச் சப்தமும் இல்லாத மரணமும் மின்னிய நகுலன் வீடு. நிசப்தத்தை ஆழப்படுத்திய ஆத்மாநாமின் அணில் கில்கிலா.... கில்கிலா..... இல்லா..... இல்லா கதவுதானே திறந்து எக்கி அமர்ந்த பூனையின் சூரல் நாற்காலியின் சொரூபநிலை' சாகாக்கலை' விளம்புவீர்போகரே'

அப்படியே ஆகட்டும். சரி சரி..... உம் வீட்டிலுள்ள கவிஞர்களின் புத்தகங்களில் மறைந்திருக்கும் நானாவித உலோகங்களையும் பிரித்தெமக்குக் கொண்டு வாரும் படித்து... இவர்களைச் சுற்றி வறுமையும் தங்கக்குவியலும். அது ஒருபோதும் செலவழிக்கப்படப் போவதில்லை. அகம்புறக்கவிகள் சிலரோ கரடுமுரடான உலோகக் கருவுடன் திரிகிறார்கள். பூமிக்குக் கீழேயும் மலையுடன் ஏறிச் சரிந்து மறைந்து வாழ்ந்துவர மொழி நிகண்டுகள் இலக்கணம் உட்பொதிந்த நுண் இழைகள் பிரித்து லட்சண அவலட்சணக் கலவி கொண்ட சங்க நிலக்காமம் பெருந்தீயாக மூல இயற்கைப் பொருட்களில் சுருண்டிருக்கும் இனியான கவிகளும் வெடிப்பெழுச்சியில் தங்கத்தின் உள்

அயற் பொருட்களின் மென்சகதி மிதித்து நடத்து வருகிறார்கள். ஆற்றுப்படைகளின் நடையில் புராதனம் பிதுங்கி எரியும் இவ்விதயம் நூற்றாண்டு பழுத்த மலைத் தொடர்களில் உருண்டு ஒலி வீசிட உலோகங்களில் வேலை செய்த நாகரீகங்களின் வெண்ணாற்றில் உலோகக் கைவினைகள் சிற்பிதமாகிக் கலை மேம்பட்ட உலோக நெகிழ்வில் காலம் பாசியடைந்து துயருற்றிருக்கிறது நீலரவிக்கை அணிந்த பூனையே ' நீலப்பூனை தன உலோக உடலைக் குழைவு படுத்தித் திரும்பிக் கேட்டது போகரிடம், 'அட்டமா சித்தி பெற்ற ரஸவாதரே... நமஸ்கரித்தோம் உம்மை. நவபாஷாணச் சிற்பம் படைத்து வரும் உமது சிருஷ்டி இன்னும் முடியாமல் தொடர்கிறது. வறண்டவற்றை செறிவூட்டியும், மற்றமையில் எழும் விடைத்த நார்களை உருவி கடுமையற்றதாக்குகிறீர், உறுதியற்றதாக்குவீர், வலுவற்றதாக செறிவற்றதாக தொய்வடையச் செய்குறீர். அனுதாபம் வாய்ந்தபட்பங்களும் ஔஷத மணி மந்திரங்களும் சேரக் குளிகையிட்டு உலோகச் சேர்க்கை கொண்டு இலக்கண ஓர்மை அடையும் தமிழை சிலையாக்கும் பற்றுள்ளவரானீர் அல்லவா?

போகமுனி கவிஞர்களின் வாச்சியார்த்தம் பிளந்து ஓடும் உலோகங்கள் யாவும் பழுக்கக் காய்ச்சிய மொழி பிரிந்து நிறம் பலசேரும் லாவா? என தன் இடுப்புக்கயிறுகளில் தொங்கிய பதினெட்டு சாவிகள் கிளிங்... கிளிங்... என ஓசையிட அதில் அசையும் சீனப் புட்டிகள் பலவற்றில் ஊற்றிக்கொண்டும் பரிபாஷையில் குடித்து மொழியைக் கழித்து திறந்த கலையும், எதிர்முறணும் எழுதி வந்த சரமகவிகளின் பேச்சும் புலம்பற் பாடலும் மௌனத்துள் சுருள்கள் பின்னிய பரிபாஷைகள் சித்தித்து திறந்த ரஸக்குடுக்கைகள் தொங்கும் மீன் செவுள்கள், டிராகன் மீன், இரு சேர் ஒட்டுடல் ரஸவாதியான குறியீடு போகர் தான் என நகுலன் உணர போகர் எடுத்த ஆதிரஸம் சீசாவைச் சாய்த்து சில துளிகள் உற்று நோக்கி வடித்த கவிதைகள் இவர்களிடம் அசேதனங்கள் சூமியிடும் மாய உலகாகத் தோன்றலாயிற்று.

கீழ்கடலைத்தாண்டி பறந்து கொண்டிருந்த போகர் தென்கிழக்கில் ஆதிரஸக்கிணறு இருப்பதும் அதன் வட்டச்சுவரில் போதிதர்மா ரெப்பை வெட்டிக் கொண்ட மீன் கண்கள் எரிதவம் உற்ற கச்சிமாநகரிலிருந்து திரும்பி; சென்றுவிட்ட பாய்மரக் கப்பலுக்கு மனிதனைவிட அதிகம் தெரிந்த தொலைவுகளும் நகரங்களும் கவிஞர் மனதில் உழன்று தேம்பும் தனிமையின் இளஞ்சிவப்பு மயக்கம் கிழிந்த கடற்பாய்களில் பழுத்து மிதக்கும் தூரத்தோற்றம்.

போதிதர்மாவிடம் ஈடுபட்ட தன் சில கவிதைகள் மீனின் கண்கொண்ட தீராத தவம் உதிர்த்த செதில்கள் பரவும் திக்கெல்லாம் குனிந்து ஒவ்வொன்றின் வெற்றிடம் பாழ் சுரக்க அதுவே வெண்மையாக எனவே ஜென் கவிதைக்குள் வரையப்படும் நிறமெனப் பல வெண்ணிற ரஸவாதராய் ஒரு வீட்டின் உள்ளில் தனித்திருக்கும் புஸ்தகம் பீரோவில் அனைவரும் சாயைகள் எனத் தன்னையும் கடந்து கொண்டிருக்கிறார் நகுலன். போதி தர்மா ஒருமுறை நகுலன் வீட்டிற்கு வந்த சமயம் வீட்டில் யாரும் இல்லை. ' என்ன செய்து கொண்டிருக்கிறாய்' வீட்டின் பழமை வடிவத்துடன் உரையாடிச் செல்ல நகுலனும் அங்கில்லை.

விண்வலையில் இழுக்கப் பெறும் மீனாகி நீந்தும் சித்தர்களின் சஞ்சலம்தான் என்ன? உடல் அற்ற சித்தர்கள் எங்கே வருகிறார்கள் எனக் கேட்டது ஷேக்ஸ்பியரின் மீன் நகுலனை.

நகுலனின் மௌனவட்டம் பேசும் போதிதர்மாவின கடற்குதிரை ' நகுலனே உமது புத்தகங்கள் யாவும் குதிரையை பூட்டும் சேணங்களாகும் உடலே சித்தர்களின் புத்தகங்கள். உப்பு வகைப்பூட்டில் சொல் திறக்கும் கடற்கவியும் பட்சிமந்திரயாளி வடிவம். மெல்ல மெல்ல பனியின் வெள்ளைப் பழங்களை சேகரித்து வரும் உப்புத்தீவரி முயல்கள். கடல்பளிங்கு ஆயிரம் சிறபங்களாய் தோன்றும் பட்சிமந்திரயாளி இறந்த கடலின் உப்பு அதிகரித்த கரையில் சாம்பலே பழங்களாக சதை வனப்பாகி விளையும் சோபோம் ஆப்பிள்களைப் போல சாம்பலான அனைத்தும் சுவை நயமானதே. பட்சிமந்திரயாளி புலப்படாதவனாக, இருப்பிற்கு நுட்பநயம் சேர்ப்பவனாக ஒரு கலைஞனின் உருவோவிய இளைஞன் ஜேம்ஸ்ஜாய்ஸ் கடவுளைப்போல தன்விரல் நகங்களை சரிசம நிலையில் பேணுகிறான்.

என் வலரயில் காற்றில் பறந்து சென்ற பறவைகளைப் போல பட்சிமந்திரயாளியில் வீழ்ந்துதிரும் செதில்களே கவிதைக்குள் ரத்தம் விளக்கின் புராதன ஒளியை நுகரும் யாளி

' சுய சித்திரத்தில் வான்கோ
வெட்டிக்கொண்டான் காதை
கட்டுப்போட்டு அதையும் படமெழுதி
சுக்கான் பிடித்துப் புகைவிட்டான்
அந்தணர்க் கந்தணன் சொன்னான்
பிட்டும் பிடிசாம்பலும்
சொந்தமண்ணும்
சமமே சமம்' (நிலவின் இதயத் தாளம்)

கவிதையில் மல்லார்மிக்கும் லியோபார்டிக்கும் வெளிப்பட்ட ஒன்றுமில்லா நிலையை ' இல்லைநிலை' கவிதை கடக்கிறது தமிழில்.

பதெலேர் ' தொல்பெரும்பாழ்' எனச் சொன்ன ' மீட்சியில்' பூமியின் நாட்குறிப்பேடு திரும்பும், ' இருமுலைகளின் மீது பாடுகிறது ரயில் உனக்கொரு உலோகத் தாலாட்டு' (பிரம்மராஜன்)

உப்புத்தீவரி முயல்களின் கேள்வி: சூட்சும நயமிகு மறைநுட்ப ரஸவதியே! மற்றவருடன் ஒத்திசைகிற முதலையின் மௌனங் கொண்ட நதியில் புரளும் அலைகளினூடே கடந்து வருகிறாய். முதலைமீன் கலந்த பேசாத உருவியமும் பச்சிமந்திர யாளியே, பிறவற்றுடன் ஒத்திசைகிற உனது எழுத்தாளரென்று ஒருவர்கூட இல்லையெனில் இசைந்திணைவிக்கும் உனது ரஸவாதப் படைப்பு விதிகளின் செயலெல்லையில் ஆகக் கூடுவது என்ன?

ரஸவாதி : (கீழ் நோக்கிய யாத்திரையில் கடலடிநகரத்தின உலோகக் கூடத்தில் பூமியின் சுழல்படும் பலவித ஊலோக பாஷைகளை கூறியவாறு தனித்திருக்கிறான்)

அவரவரின் தாமிர நினைவுக்குள் / திரும்பி விடுக - ஈரக்காலணிகள் / அறைக்கு வெளியே ' ஒரு வேளை இடியாகவும் காற்று உராய்வில் துத்தநாகக் கூரையாகவும் அசுரன இலையுதிர்த்து நிமிர ஊதாவைச் சூடிக்கொள்ளும் மே மாதம்?' ..

' சருகு இலைகள் காற்று உரசி துருகமற / கேஸட்டுகளின் மௌனக் / கரைசலில் / இசையின் ஈர டைனமைட்....

சிந்தனையில் வீறிடும் பீங்கான் கூக்குரல்... உடைந்த ஓட்டுச் சில்லின் மீதெல்லாம் பூசிய குரோமியம்....

விழிகளைச் சுழலும் ரேடியப் பூச்சி.... செய்திகள் பாயும் நியூரான் பாத்தி.... குளிரா துளிர்க்கும் காற்சதங்கை' பிரம்மராஜன் கவிதைகளில் எடுத்த தன்நில வரைப்படத்துக்கு அப்பால் இருந்து அவரே வடித்த பருதி ரோக வேட்டை நிரம்பியதும் கோப்பைகளை காலி செய்து வருகிறார். கைமாற்றிக் கெடுத்து செல்கின்றன சத்னா ரயில் நிலையத்து தேனீர் விடுதியில் பிரம்மராஜனின் சாம்பல் நிற கிரேசிய குவளையினை ஏந்துகிறேன். மறதியில் விட்டுச்சென்ற மகளுக்கான கடிதத்தையும். அவரிடம் கைமறந்து வெளியேறிய திருகு சுருள் எந்திரஆவிஉரு இடாலோ கால்வினோ சொல்கதையாக மாற்றியமைத்ததும் ஆன வடிவம் விஞ்ஞானக் குறியீடுகளின் நவீன தொன்மமறை ஆவி நிலத்தில் கால் பாவாத தன் மிதப்பிலிருந்து நிலத்திலும் கடலிலும் உள்ளீடாக எதிர் கவிதை நீருக்குள் இருந்து நீரைப பறிப்பதுபோல் ஆனதில் கடல் பற்றிய 17 கவிதைகளும் கோர்த்தசாரின் ' ஆக்ஸலோட்டாஸ்' கதைபோலும் தொல்விழி ஞாபக வனத்தில் ஊடுருவி இயக்கமாகும் மீனின் உள உணர்வியல் கோடுகளில் உரசும் மொழி என நீர்க்குமிழ் - கணிதன் சொல்லி மறைந்தான்.

உப்புத்தீவரி முயல்களைத் தூக்கி உலோகப் புல் கொடுத்தும் உரையாடுகிறான ரஸவாதி அருமையான உப்புத்தீவரி முயலே. ஆலீஸ் நெருங்குகிறாள் உன்னை. உனது சஞ்சீவனியான எளிக்ஸிர், உனது கன்னிமையின் தாது, உனது உறக்கம் உனது வரையரையில்லாச் சிறுகல், தங்கத்தின் விதையான கிரிஸோஸ்பெர்ம், உனது உப்புக் கத்தியில் மறையும் சிறுத்தை, உனது உயரந்தரு எண்ணெய், சல்பர், மெர்குரி, கவிதைகளின் குருதி, உனது தேரையே சித்தர் ஆகும் தேரையர், டியூமி, உனது மார்ஷெசைட், மாக்னீசியா, காகம் எனும் காகபுஜண்டர் பெருநூல் திறக்கும் உலோகப் பூட்டுகள், சூரியப்பால் நிரம்பிய கோப்பைகளிலுள்ளஅத்தனை புரதங்கள், கனிமங்களின் உலோகார்த்தம், விண் மண்டிலம், நிலா, அதன் ஒளிமறைப்பின் சூரிய சக்தி, உன் அட்ராப், லேத்தோ, மஞ்சள், உள்ளியம் அதன்பிறகு.... உனது தோல் நிற ஆணும் பெண்களும், நீ உண்ணும் சுத்த மரக்கறி, மாம்ச உணவுப் பொருட்களுடன், மாதவிடாய், சிறுநீரின் மூலப்பொருட்கள், முட்டை ஓடுகள், பெண்களின் முரணும் இணக்கமும் கட்டுப்பாடுகளும், தலைமேலுள்ள கேஸம், எரிந்த துணிகள், சீமைச் சுண்ணாம்பு, மெர்ட்ஸ், களிமண்,

எலும்புகளின் பவுடர், இரும்பின் செத்ல்கள், கண்ணாடி மற்றும் உலகின் புத்தியல்பான ஆக்க கூறுகள் இவையெல்லாம் பொங்கி உற்பவித்து, உருவமையும் மனிதன் எனும் பெயர், அல்லது கலைஞன்

உப்புத்தீவரி முயல்கள்: அவ்வளவுதானே ரஸவாதி

ரஸவாதி: இவையெல்லாமும் உள்ளார்ந்த எனதிந்த சிருஷ்டிகரத்தில் மனிதன் எனப் பெயரானவன் மனமாரச் செயலில் முனையும் ஒன்று கலையைத் தவிர வேறில்லை.

இக்கலைதான் நமது எழுத்தாளர்களின் எழுத்தில் பிரயோகமாகிறது. அவரவர் தம் கலைப்படைப்புகளை புதிர்களில் சூட்சுமங்கொள்ளச் செய்யும் கலைஞர்கள்.

தீவழிச் செல்வத் தெய்வம் மம்மோன் குறுக்கிட்டது பட்சிமந்திர யாளியை.

உப்புத்தீவரி முயல்கள்: ' காம்யுவின் மித்ஆஃப் சிஸிபஸ் பொது முறையிலிருந்து விலகியவனாக இல்லாமல் நமது எல்லோருக்கும் உரியவனாக இருந்திருக்க வேண்டும். என குற்றம்சாட்டி இதயத்தை பிளக்கும கடுவேலையாக பெரியதொரு கற்பாறையை மலைக்குமேலும் உருட்டிக் கீழே விடாமல் அடிவாரத்துக்கும் இடைவிடாமல் திரும்பத்திரும்ப உருட்டிச்செல்லும் மீளாத்தண்டனை அவனுக்கு இறந்தவர்களிருக்கும கீழுலகின் அரசன் ஹேடீஸால் விதிக்கப்பட்டது பற்றியெல்லாம் உங்கள் மனிதன் அறியவைத்து விட்டான் .... இல்லையா?

ரஸவாதி: உப்புத்தீவரி முயலே ஒரே சமயத்தில் நீ கடவுளுக்கும் தீவழிச் செல்வ தெய்வ மம்மோன் பற்றுள்ளவனாக இருப்பதால் தான் நீ பென்ஜான்சனின் ரஸவாதி நாடகப் பிரதியை கீழுலகின் லேதே நதியில் நனைத்து முழு மறதி நிலையை அடையச் செய்துவிட்டாயா?

உப்புத்தீவரி முயல்: வாழ்வு இப்போதெல்லாம் போதுமான அளவிற்கு நீண்டு நெடியதாக இல்லை. முன் கவனமாக எனக்கு நேரத்தை விட்டுக் கொடுப்பதில்லை. நேற்றைப் போன்ற முத்தம் உனது கவிதைகளை மயங்கிக் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. உடனடியாகப் பிரிவதற்கு நான் மீண்டும் உப்புத்தீவரி முயல்களையே முழுஉடலாக வெறுமையான கடல்நீலம் கசந்து வாழ்கிறேன இவ்வேளை. இவ்விடம் தோன்றும் உப்புத்தீவரி முயல்கள் சரணடையாமல் பிரிந்துவிடும் என்னிடமும் கூட என்னால் காத்திருக்க இயலாது மறுப்புரைக்கும் இன்றைக் கவிதைகளில் மறைந்திருப்பவன் நான்

நகுலன்: இங்கே சம்வாதம் எதற்கு. யாருடனும் யாருமில்லை வேஸ்ட் லேண்டில் இறந்த மனிதர்கள் தம் எலும்புகளை இழந்துவிடும் இடமான எலிகளின் நீண்டொடுங்கிய பாதையில் டி.எஸ்.எலியட்டில் நாமிருப்பதாக எண்ணுகிறேன்.

(நகுலனையும் ரஸ்வாதியையும் கடந்து ஓடிவந்த உப்புத்தீவரி முயலை தூக்கி கொஞ்சியவாறு ஆலிஸ் அடுத்திருந்த த்ரூத லுக்கிங் கிளாஸ் படப்புத்தகத்தை திறக்கிறாள்.

புத்தகத்தின் சித்திரங்களின் உரையாடல்: என் தலைக்குள் சல்லடை வழிபாயும் சிறுசிறு துளி வடிதாரையாக இறங்கும் ஒலி. ஆனால் ஒருவருமில்லை என்பதே அங்கே பதிலாக வந்து எஞ்சியது. நீடித்திருக்க மிக அருகலாகிக்கிடந்துவிட்டது காலம். ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவராகத் தம்மில் எல்லோரையும் தின்றுவிட்டார்கள். டிராகன் மீன். கடும்பசிக்கு ஒரு மனிதனைக் கொடுப்பதாக இருந்தால் உன்னுடைய தொண்டையில் கத்தியை வை. அது உப்பாகட்டும்.

ரஸவாதி: வயிற்றைவிடப் பெரியது கண். ஊழ்விதியுடன் தற்பொழுதைய போர் நிறுத்தம் இது சூரியோதங்களுக்கோ நதிகளுக்கோ கவிதைகளுக்கோ நடப்பதில்லை. எனவே உடனடிப்போர் நிறுத்தம் கையெழுத்தாவதாக அமைவதுதான் கலை. அமைதியில் உறங்கும் கனவுதான் அனைத்துக் கலைகளுக்கும் எடிட்டர்.

நகுலன்: பூமியிலிருந்து சாம்பலிலிருந்து தூசியிலிருந்து நிச்சயமாக எப்போதுமே நிகழ்கிறது புத்துயிர்ப்பு பூமியாக சாம்பலாக தூசியாக.

ரஸவாதி: நமது சாம்பல்களில் கூட அவர்கள் வழக்கமாகப் பழகிய எல்லா நெருப்பும் நீடித்து வாழ்கிறது.

'நரைத்து உடைந்த இரவின் சிதறல்கள்
நேரமாய் வந்துவிட்ட
தோட்டியின் கால்களின் முன்
மண் தின்று எஞ்சிய
எலும்பின் கரைகளில் சிற்பத்தின் வாசனை'

(பிரம்மராஜன்)

தன் முற்பிறப்பு எலும்புகளில் மணிமேகலையில் கண்ட ஆபுத்திரன் செந்நிலமேடுநோக்கி அனாதி நிற்கிறான்.

நகுலன்: இன்னொருவனாகவும் வேறொருவனாகவும் வரம்பு கடந்த பித்தாதீதத்தில் நிற்பவன் நான்.

கடைசி டினோசார்: உடல் துன்பத்தை மிதித்து நாம் அதிநடை நடத்தல். அற்ப வண்டும் ஒரு பெருந்தகையாளர் இறக்கும் போதான கடும் வேதனையை உணர்கிறது. மரணம் தனித்து இயங்கும் உருவற்ற இயற்கையாக வண்டின் கிறுக்கல் சுற்றிச் சுழன்று கறங்கிக் குணங்கும் ஒலி.

வருமுன்னும்
போன பின்னும்
தெரிவதில்லை எனினும்...
தன்நிலையத்துக்கு வந்துபோனதை
வண்ணத்துப்பூச்சியிடம் கேள்

வைரஸிடமும் கேட்டுப்பார்'

'பாம்பெனும் பாம்பு மறைந்தால் தாண்டவக்கோனே

யாவும் சித்தியென்ற நிலையேடா தாண்டவக்கோனே' என ஜடசக்தி பாய்ச்சி வந்த இடைக்காடர் கடைசி டினோசாரின் கவிதையில் கண்களையும் காதுகளையும் பூட்டிக்கொண்டு விட்டேன் நானே என ரீங்கரித்து அலையும் வண்டு ரூபத்தில் வந்து நகுலன் துக்கத்தில் கலந்து கொண்டாலும் நகுலன் தனக்குள் கேட்டுக் கொண்டார்: ' குருவே... ஒரு சந்தேகம், ராசிகளுக்கு வடிவுண்டா? கிரேக்கர்களின் சோழயாக் குடும்பத்தில் தமிழர்கள் உள்ளார்களா? வடிவுநிலை அவர்களிடையே எப்படி ஒத்திருக்கிறது?'

' கன்னி ஒரு கையிலே முளைப்பாளிகையும் அகலும் தனுசுவிற்பிடித்து பாதிக்கு மேல் மனிதவடிவும் கீழே குதிரை வடிவாகும் கிரேக்கத் தொன்மம் கேளே.... மகரம் முன்பு மான்தலையும் பின்பு சுறா வடிவும் அற்ற ராசிகளாகவும் கிரேக்க சோழயாகில் இடம் எதிர்மாறும் தென்கடல் சோழிகள் அலைக்கழிவை கண் இமைக்கும் இயற்கையில் கலை கீறும் 'தமிழ்ச்சாகரம்' காண்பீரோ என குனிந்தெடுத்த நகுலன் விழிச்சிப்பியை நகுலனிடமே காண்பித்தார். தன் விழிநிழல் அதில் படிய இடைக்காடர். பிதாகரஸ் தன் கிரேக்கத்தின் திணையுடல்கள் உரித்த குருதி பூசிய வட்டக் கண்ணாடியை முழுநிலவுக்கு எதிரே பிடித்துப் பார்த்தபோது தமிழ்த்திணை ஐந்தின் செம்மையும் நிலவின் கரை நெடுக குருதி வட்ட நிழல் ஐளம்புவதாயிற்று. கிரேக்கர் தமிழர் குருதியிசை இடமுறைத் திரிபிலும் சோழயாக் குடும்ப வட்டம் ஒன்றுதான். எனவே, இடைக்காடர் வழிச்சென்ற வள்ளலாரும் பஞ்சத்தின் மரணநலை தீர்க்கும் கூழ் சாலை தொடுத்தார். ஜனங்கள் வாடக்கண்டு சோற்றுடன் உருட்டிய அருட்பாவின் விழி திறந்தார், சமயச் சாத்திரம் நீக்கி.

' இந்தக் களிமண் வீடு கைகளால் செய்யப்பட்டதல்ல' . நகுலன் இடைகழி நாடு சென்று பார்த்த மதியத்தில் சூரியனற்று வெண்மையான களிமண்ணைப் போலிருக்கிறது வானம்' என்றார். இடையன் மேட்டில் ஆடு மேய்க்கும் தொரட்டியுடன் இடைக்காடர் மந்தை பிரிந்த ஆடுகளைத் தேட, அவரறியாமல் அவரிடம் காணாமல் போன ஒன்றை நகுலன் ஏந்திவர மற்றவையும் வருகின்றன.

வானமும் வெள்ளைக் களிமண்ணாக சாம்பல் உதிரக்கோடையும் வெறுமை படிகிறது வெட்டவெளி தன்னில் களிமண் திரட்டி மண்ணணிபாக வரகு பிசைந்து விழன் வேய்ந்த குறம்பைகள் சுட்ட இடைக்காடர் ஆரூடத்தில் இன்னல் தரும் கடும்பஞ்சம் திரும்பி வர, மழையின்றி தாவர சங்கமங்கள் வாடக் கருகின. பறவைகளும் விலங்குகள் குரல்வளையில் நீரறுச் சபதம் ஒடுங்க, பயிர்செய் பருவத்திற்கு வறட்சியான பழங்குதர்க்கங்களைத் திரும்பவும் ஏற்பது நீலம் மற்றும் மஞ்சள் தவறு. பிறையொளிமறைப்பில் உவர்ந்திருந்த எருக்கம் பூக்கள் மாலைக் கோர்த்த காட்டுக்கல்மொழி பேசுமே. எருக்கிலை தின்னும் ஆடுகள் அரிப்பு ஏற்பட குருவரகு தானிய நரம்புகள் பரவிய மண்சுவர் உரசவும் தானிய வெளிச்சத்தில் ஜனங்களும் பஞ்சம் மறைய கடந்து செல்கிற களிமண் வீட்டில் நகுலன் விரல்களில் சிறுதலைய விதைகள். ஒரு விழன்

குச்சியை உருவி எடுத்து நின்று 'மரணத்தின் கசப்பு இப்போது கடந்துவிட்டது' என்றார் நகுலன். 'வரகுரொட்டி தருவேன் தாண்டவக்கோனே.... ஆட்டுப்பாலும் அருந்துவாயோ தாண்டவக்கோனே...'

'உலோகவியற்காற்று கண்ணாடி பூட்டிய எட்டுக்கால் குதிரையை இவர்ந்துச் செல்லுகிறது. ஒரு காலை முன்வைத்து ஒரு காலை பின்வைத்து ஆரஞ்சு தோலுரித்த ஆரஞ்சு மரத்தினுள் வெண்கலப் பாம்பு இராமல் இருத்தல் நிலையில் அசைந்தியங்கிய சில்வியா ப்ளாத்தாக எலும்புகளை சுசீலாவிடம் மெய்யுணர்ந்தபடி அவள் கரம்பற்றிச் செல்கிறார் நகுலன், துக்கம் அனைத்தின் சரிதத்திற்கும் கவிதையாக.... களைப்படைந்த நிலத்தில் கண்ணாடிப்பாறை படிந்துள்ள உவாந்தம்.

அ. பாழ் – உவாந்தம்

'இப்பொழுதும்
அங்குதான்
இருக்கிறீர்களா?
என்று கேட்டார்
எப்பொழுதும்
அங்கு தான்
இருப்பேன் என்றேன்' (நகுலன்)

ஆ. 'வெள்ளி வட்ட நிலவு'
ஜென்புத்த மார்க்கத்திலிருந்து......

எப்பொழுதும் அங்கு தான்
இருப்பேன் என்றேன்
(உவாந்தம்)

எப்பொழுதும் அங்கு தான்
இருப்பேன் என்றேன்
(கர்ப்பத்திலான தலைகீழ்
சிசுநிலை) (சிருஷ்டிச்
சமநிலை) குருதிநிழல்

இப்பொழுதும் அங்கு தான்
இருக்கிறீர்களா? (பாழ்)

'இப்பொழுதும் அங்கு தான்
இருக்கிறீர்களா?'
குருதி (நீர் ஆவியாகும்
வறட்சி) பாழ்

டேரட்கார்டு 18ல் உள்ளவாறு பௌர்ணமிக்கு
ஆகர்ஷணமான அண்மையில் தலைகீழ்
நீர்த்துளியாலான வறட்சித்தன்மை

i) இவ்விதமாயிருக்கும் நிலை (Thusness)
ii) லன்காவதாரச் சூத்திரத்தன் உளவியலான
(பிரக்ஞை கிரஹம்) எனும் கருத்தமைவு
பாழ் – உவாந்தம்

பிதாகரஸின் குருதி பூசிய
கண்ணாடி வட்டிகை

இ. வெள்ளி வட்ட நிலவு, அதில் பிரதிபலிக்கும் பிதகாரஸின் குருதி நிழல். வறட்சி என்பதுடன் நகுலன் கவிதை வரி 'எப்பொழுதும் அங்கு தான் இருப்பேன்' என்பதன் மூலம் பௌர்ணமி, அமாவாசை இருநிலைகளும் சிருஷ்டிநிலையை உவாந்தம் என்ப, டேரர்காட்டு பதினெட்டின் நிலை உடனாக.

ஈ. பிதகாரஸின் நெடுங்கூந்தல் வட்ட நிழல் விம்மி பிரதிமையாகும் குருதிநிழல் அவரின் நீள்கூந்தல்தாம்.

உ. தன்பாலை மண்ணுடலின் குருதிபூசிய கண்ணாடி வட்டிகையை ஆகாயத்தில் வெள்ளி வட்ட நிலவு எதிரே உயர்த்திப் பிடித்துப் பார்த்தார் பிதகாரஸ்.

ஊ. நிலவில் எப்போதும் பரிபூரண அமைதி நிலவும். எவ்வளவு குரலிட்டாலும் யாருக்கும் கேட்காது. பூமியின் ஒலி காற்றின் வழியாகப் பரவுகிறது. நிலவில் காற்று இல்லை என்பது விஞ்ஞானம்

.

எ. நிலவிலுள்ள கரும்புள்ளிகள் வாய், மூக்கு, கண்களை மிக ஒத்தவை.

ஏ. வட்டக் காகிதப்பரப்பிலுள்ள (வட்ட நிலவிலுள்ள குருதியை (குருதிநிழலை) உருப்பெருக்காடி மூலம் பார்த்தால் அது நூலிழைகளால் ஆனதாகத் தெரியும்.

ஐ. நிலவு பற்றிய ரஸவாதம் நிலையாமையையும் (ஓயாது மாறுமியல்பையும்) இயற்கையிலான வளர்சிதை மாற்றங்களையும் வறட்சியின் மெய்யுணர்வியலையும் கொண்டதாக இருக்கும்.

ஒ. நிலவுக்கும் இரவுக்கும் உள்ள நெருங்கிய உறவுமுறை: தாய்மைநிலை உலர்ந்த கருப்பையிலிட்டு மூடப்பட்ட நிலை, நனவிலிநிலை, இருமுக உணர்ச்சிப் போக்குடையதாக ஒரே சமயத்தில் பாதுகாப்பு நிலையும் இடர்களால் சூழப்பட்ட நிலையும் கொண்டிருக்கும் நிலை.

ஓ. பரிதியுள்ளார்ந்த பொருட்களின் மெல்லிய எதிரொளிர்வாக மறுபிறப்பை மீட்டும் நிலவொளிர்வு.

ஔ. சுசீலா தன்னை ஒத்த உருவத்தை நிலவாகச் செதுக்கிக் கொண்டாள். வறட்சியின் மெய்யுணர்வியல் மூலம் நிலவு அதன் ஒளியை பரிதியில் வடிக்கிறது.

ஃ. மாணிக்க வாசகர் எழுதிய திருவெம்பாவையில்.......

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியனே......
பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியுங் மெல்லாப் பொருண்முடிவே

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னற் திகழ்ந்தெம்மை யாளுடையாளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோ என்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியால் மழையலோ ரெம்பாவாய்.

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்''

(திருமந்திரம்)

எனத் திருமூலரிடம் பெற்ற மாங்கனியை தின்னக்கொடுத்த சுசீலாவிடமிருந்தும் பரஞானத்தை அடையக்கோட்காவிட்டாலும் தாந்தரீக புத்தாவிடமும் சக்திபெண் வடிவமானதில் தன்யங்களையடைந்த புத்தாவின் ஓவியங்களில் கண்ட ஆனந்த குமாரசாமி திபெத்திலிருந்து எழுதிய குறிப்புகளை கடந்து நகுலனும் ஒளி மறைபயில் சுசீலாவின் நிலாச்சரீரமறைந்த இருட்டில் "ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்" எனப் பாடிக்கொண்டே தனியன்பாதையில் உவாந்தம்.

கயாவுக்குச் செல்லும் சத்னா ரயில் நிலையத்தில் காத்திருத்தல்

25.8.2007 சத்னா



ன்று நான் தேனீர்
நந்து சிவா வரவை
நக்கிறது எங்கும்.
சி' இப்போது என்
ன் சத்னாவுக்குள்
ாமியின் குமாரபுர
குவளைகளுடன்
புக்குத்தான் நமது
யரும் யாருக்கும்
சூட்டிக்கொண்டார்.
பை பெயர்களாகச்
ரகு சேக்ஸ்பியரிய
ஜனிய மீன் பாத்
ாக தோன்றிய
முன்னேறுவதில்
கோடி பட்டனமாக
அரிச்சமுடையில்
நகுலன் மீனாக
சொற்படிமானமுற
ன்பே வலையை
கு தனித்தன்மை
பிரச்சனைகளும்
நிஜப்பெயர்களை

னர் தம் பெயரை
மாக விண்ணுக்கு
க்குகளின் பன்மை
எழுந்தது பேபல்.
க்கப்படுவதற்கான
ற்றும் குருதி, மரம்
நார்மடி, பாறை
த்து மூலம்" எனும்
நூலில் தொகுக்கிறது ஜர்ஸ் இலககணவியல.

நெருப்புமிழும் சீன டிராகனாக சிதறிப்பரவும் செதில்களாக உள்ள உள்ளக்குமுறல்களாக, பேரழிவின் மினுக்கங்களாக, கரும்பச்சை உதிரால் இழைகளில்

கயாவுக்குச் செல்லும் சத்னா ரயில் நிலையத்தில் காத்திருத்தல்

25.8.2007 சத்னா

அன்புள்ள புது எழுத்து ஆசிரியருக்கு...

சத்னா தமிழ்க் கவிதைக்குள் படிகம் கொண்டது என்பதுகளில். இன்று நான் தேனீர் கோப்பையுடன் கஜிரகோவிலிருந்து திரும்ப இரவாகிவிட்டது. ஜபல்பூரிலிருந்து சிவா வரவை எதிர்பார்த்து கல்பழுக்கும் ஸ்டேஷனில் இருக்கிறேன். பிரிவுகளிலிருக்கிறது எங்கும். தொலைவுகளும் எலும்புகளும் எல்லா மனிதர்களும் தீவுகள் தாம் 'மீட்சி' இப்போது என் பால்யம் நகுலனுக்குள்ளிருந்து நீள ரயில் வண்டி தொடர் பிரம்மராஜனின் சத்னாவுக்குள் கடந்து கொண்டிருக்கிறது. சத்னா எனது பால்யத்தில் கண்ட கு.அழகிரிசாமியின் குமாரபுர ஸ்டேஷனின் வசீகரத்துடன் கைமாற்றிக் கொடுக்கப்படும் பல பீங்கான் குவளைகளுடன் காத்திருக்கிறேன். கவிஞர்கள் அதிகத் தேனீர் நிரம்பியவர்கள் நகுலனுக்குத்தான் நமது தேனீர் சடங்கு சத்னாவில் நிகழ்கிறது பார்த்தீர்களா?. யாருடைய பெயரும் யாருக்கும் தெரியாது என்று சொல்லி நகுலனுக்கு நகுலனே நகுலன் என்று பெயர் சூட்டிக்கொண்டார். ஆதாம் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் அதனதன் சொந்த இயல்பை பெயர்களாகச் சூட்டினான் என்ற போதிலும் மீனிற்குப் பெயர் சூட்டவில்லை. அதன் பிறகு சேக்ஸ்பியரிய மீனை சேக்ஸ்பியர் கடலில் நீந்தச்செய்தார். அதன் பிறகு பிரம்மராஜனிய மீன் பாத் ஜலசந்தியில் ராமேஷ்வரம் மற்றும் 17 கவிதைகள் தீடைகளாக தோன்றிய மணற்பாலாடைபோல் தோன்ற நீரின் இழுவலிமை பின்னடைவதில் முன்னேறுவதில் நம்மில் எவர் எதை காணவியலும்?. தான் ஓயாமல் அழியும் தனுஷ்கோடி பட்டனமாக இருப்பதில் கடலோ கரையோ வரையின்றி மாறுதலடையும் அரிச்சமுடையில் எழுதிக்கொண்டிருப்பதில் கவிஞனும் கதை சொல்லியும் நகுலனற்ற நகுலன் மீனாக நீந்துகிறார்கள். நாம் எண்ணுவதைவிடவும் அதீதமாக மொழியானது சொற்படிமானமுற முடியாதபடி பித்தப்பிடித்திருக்கையில் மீனை பிடிப்பதற்கு முன்பே வலையை மறந்திருக்கிறோம். மே 1986 மீட்சி இதழில் 'பிரபஞ்ச பொருட்களுக்கு தனித்தன்மை மொழிக்குறியீடுகளாக பெயரிடுவதில் கவிஞனின் தொடக்க நிலைப்பிரச்சனைகளும் ஏறத்தாழ ஆதாமின் பிரச்சனைகளை போன்றதுதான் அவற்றிற்குரிய நிஜப்பெயர்களை கொண்டு அழைத்தல் என்று இதை விளக்குகிறார் எஸ் ரா பவுண்டு'.

எனவேதான் பெயரின்றி அர்த்தமாகிறது 'ஷெம்' ஆதி மனித இனத்தினர் தம் பெயரை சொந்த மொழியை பிரபஞ்சம் முழுதளாவ நிரூபிக்கும் கடும் பிரயத்தனமாக விண்ணுக்கு உயர்ந்துவிட எழுப்பிய பேபல் கோபுரம் விவிலியப் புராணிதத்தில்... நாக்குகளின் பன்மை காரணங்கள் தாம் துயர்தரு பேதக் குழப்பங்களின் கோபுரமாக எழுந்தது பேபல். குழப்பத்தில் மொழி மீனைப் பிடிக்கவியலுமா? பேபல் கோபுரம் உருவாக்கப்படுவதற்கான மொழியின் ஒன்பது ஆக்கக்கூறுகளை களிமண் மற்றும் மீன், கம்பளி மற்றும் குருதி, மரம் மற்றும் சுண்ணாம்பு, கற்பூரத் தைலத்திலிருந்து வடிக்கப்படும் கீல், நார்மடி, பாறை எண்ணையிலிருந்து வருவிக்கப்படும் நிலக்கீல் என "கவிஞர்களின் எழுத்து மூலம்" எனும் நூலில் தொகுக்கிறது ஐரீஸ் இலக்கணவியல்.

நெருப்புமிழும் சீன டிராகனாக சிதறிப்பரவும் செதில்களாக உள்ள உள்ளக்குமுறல்களாக, பேரழிவின் மினுக்கங்களாக, கரும்பச்சை உதிரால் இழைகளில்

வாசிபடிந்து விதிர்விதிர்க்கும் படர் சூரல் நாற்காலி நகரும் கொடியாக திறந்த பிரஞ்சு ஜன்னல்களில் ஆப்பிள் மலர்ச்சியுறும் ஒருங்கிணைவின் ஊடே வானத்திற்கு தப்பி ஓடுவதாக "பியானோ சொனாடோ ஓபஸ் 110" தன்னைத் தானே விழுங்கிக்கொள்கிறது. தமிழ் கவிதையின் வானடில் நீர்ப்பாம்பு நீச விழகல் கோணத்தில் பல இணைவிற்களாகப் பிரவாகம் எடுக்க தன் வாலை தானே விழுங்கும் நிறக் குழப்பங்களுக்குள் இறந்த செல்கள் ஓபஸ் 110ல் மறுபிறப்படைவதை நகுல மீனும் பிரம்மராஜனிய மீனும் ரெப்பை வெட்டிக்கொண்ட விழிமோனத்தில் ஜனன துளைகளாக மர்மம் கொண்டிருப்பது நமது முத்தம் பட்ட கடல் என்பதால் மொழி மீனை பிடிக்கும் பால்மண்டலத் தலைமுறை கவிஞர்கள் தோன்றி வரும் நேரமிதுவே.

தீட்சா பூமி எக்ஸ்பிரஸ் எண் 2144/25.8.2007/ S7 கோச், பெர்த் 42,43 மலைசூழ் நாகலாபுரத்தை சேர்ந்த சிவா அதே ரயிலில் கையசைக்கிறான். சத்னாவிலிருந்து கயாவுக்கு இரவுப் பயணம். நதிகள் நிரம்பி பொங்கி ஓடும் நதி கங்கை கூடும் பிரிவை எண்ணி சங்கமத்தில் சரஸ்வதியின் அரூபம் தண்டவாள இரும்பு ஈரத்தில் நனைந்த ஊழின் பாழ் உரசும் ஊளைகளுடன் கடக்கிறேன். பிறகு... உங்கள்

கோணங்கி

●



தேடித்திரிந்ததைக் கண்டது
நாடி வந்தவனைக்
கண்டபின்தான்

புது எழுத்து தனிச்சுற்றுக்கு மட்டும்